உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-7 இதழ்-182

ஆகஸ்ட் 1-16 2024



## தீமிதி திருவிழா நடைபெறும் சிவன்கோவில்

## எமன் தொடர்புடைய கோவில்களில் நவக்கிரக சன்னதி இருப்பதில்லை

e-magazine
e-magazine
e-magazine
e-magazine

e-magazine
aanmeegamalar.com

# எமனை விரட்டிய நந்தி எம பயம் போக்கும் கோவில்





தற்போதைய கேரளாவை ஆட்சிசெய்த மன்னன் ஒருவன் ஆட்சி அதிகாரத்தை கையில் வைத்து அதிகமாக பெண்களை ஏமாற்றியும், பெண்களை அடிமை களாக நடத்தியும் வந்தான்.


ஒருகட்டத்தில் மனதளவில் திருந்தியவன், பெண்களுக்கு தான் செய்த துரோகத்தை எண்ணி வருந்தினான், பெண்க ளால் ஏற்பட்ட பாவத்தை போக்க நினைத்து ஒவ்வொரு சிவத் திருத்தலமாக தரிசனத்தை மேற்கொண்டு வரும்போது முனிவர் ஒருவரின் அறிவுறுத்தலின் பேரில் திருவிசநல்லூர் சிவயோகிநாதரை தரிசித்து, தவம் செய்து தனக்கு ஏற்பட்ட பெண்பாவங் களை போக்கிக் கொண்டான்.

பெண்களின் சாபம், பெண்களால் ஏற்பட்ட பாவங்களை போக்க நினைப்பவர்கள் இத் தலத்து ஈசனிடம் சரணடைந்தால் விமோசனம் பெறலாம்.

மேலும் சிவபெருமானின் பக்தர்களை காக்கும் பொருட்டு, சிவபெருமானின் பக்தர் ஒருவரை பீடிக்க வந்த எமதர்மராஜனிட மிருந்து காப்பாற்ற வேண்டிக்கொண்ட பக்த னுக்காக இத்திருக்கோவிலில் உள்ள நந்தி எமதர்மனை விரட்டியடித்துள்ளதாக புராணம் உள்ளது.

எனவே எம பயத்தால் அவதிப்படுபவர் களுக்கும் இத்தலம் ஒரு மருந்தாகும்.

## சிவலிங்க வழிபாடும், பலன்களும்



| | |
|---|---|
| தர்ப்பைப் புல் லிங்கம்: | லட்சுமி கடாட்சம் |
| ஆற்றுமணல் லிங்கம்: | மோட்சம் |
| வெண்ணெய் லிங்கம்: | நல்வாழ்வு |
| அரிசிமாவு லிங்கம்: | சிறப்புகள் சேரும் |
| அன்ன லிங்கம்: | தீர்க்காயுள் |
| களிமண் லிங்கம்: | மனச்சாந்தி |
| பசுஞ்சாண லிங்கம்: | ஆரோக்கியம் |

## சிறப்பு வாய்த் பூஜைகள்

கோவில்களில் நான்குகாலபூஜை, ஆறு கால பூஜை, என்று ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொருவகையில் பூஜைகள் நடைபெறும், அந்தவகையில் நடைபெறும் பூஜைகளில் சில பூஜைகள் சிறப்பு வாய்ந்ததாக இருக்கும் அந்த வகையில்...

திருக்குற்றாலம் **திருவனந்தல் சிறப்பு**
இராமேச்சுரம் **காலை பூசை சிறப்பு**
திருஆனைக்கா **மத்தியான பூசை சிறப்பு**
திரு ஆரூர் **சாயங்கால பூசை சிறப்பு**
மதுரை **இராக்கால பூசை சிறப்பு**
சிதம்பரம் **அர்த்தசாம பூசை சிறப்பு**

மேற்கண்ட கோவில்களில் நடைபெறும் பூஜைகளில் சிறப்பு வாய்ந்த கால பூஜையில் பங்கேற்றால் வாழ்வில் பல்வேறு சிறப்புகளை பெறலாம்.

# தீமிதி திருவிழா நடைபெறும் சிவன்கோவில்




தீமிதி திருவிழா என்பது பொதுவாக அம்மன் ஆலயங்களில் நடைபெறுவதைப் பார்த்திருப்போம், ஆனால் பிரபலமான, தேவாரம் பாடப்பட்ட சிவஸ்தலத்தில் தீமிதி திருவிழா நடைபெறுவதை பெரும்பாலானோர் அறிந்திருக்கமாட்டோம்.

கிரிவலத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் ஆல யத்தில் ஆண்டு தோறும் ஆடிமாதம் திமிதி திரு விழா நடைபெற்று வருகிறது.

ஆடிப்பூரத்தை முன்னிட்டு திருவண்ணா மலையில் நடைபெறும் பிரம்மோற்சவ விழாவில், ஆடிப்பூரத்தன்று தீமிதி திருவிழா வெகு விமரி சையாக கொண்டாடப்படுகிறது.

இங்கு, ஒவ்வோர் ஆண்டும் ஆடி மாதத்தில் ஆடிப்பூரம் பிரம்மோற்சவத் திருவிழா கோலாகல மாகக் கொண்டாடப்படுவதுண்டு. தொடர்ந்து 10 நாள்கள் விநாயகர், பராசக்தி அம்மன் உற் சவத் திருவிழாக்கள் நடைபெறும். இந்தத் திருவிழா வின்போது அம்மனுக்கு அபிஷேகம், வளைகாப்பு வைபவங்கள் ஆகியவை நடைபெறும்.

திருவண்ணாமலை 350 ஜீவ சமாதிகள் உள்ள ஆலயமாக திகழ்வதுடன், 51 சக்தி பீடங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது. தமது உமையாளுக்கு அண்ணாமலையார் தனது இடது பாகத்தை கொடுத்து அர்த்தநாரீஸ்வரராக இத்தலத்தில் வீற்றிருக்கிறார்.

இதனால் ஆடிப்பூரம் நன்னாளில் உண்ணா முலையம்மன் சந்நிதிக்கு முன்பு பக்தர்கள் தீமிதித்து நேர்த்திக்கடன் செலுத்துவார்கள்.

“மாலறியா நான்முகனும்'' “திருமாலும்'' ஈசனின் அடிமுடி திருவடி காணமுடியாமல் போனார்கள்..! பின்னர் அண்ணாமலையார் “ஜோதியாக” நின்றார்..!

உலகத்திலேயே மலையே பெரியலிங்கமாக காட்சியளிப்பது இங்கு மட்டும்தான், சிவபெருமான் நெருப்பு ரூபத்தில் எழுந்தருளும் திருவண்ணாமலையில், தீமிதித்து உண்ணா முலையம்மனிடம் வேண்டிக்கொண்டால், பல் வேறு நன்மைகள் ஏற்படும் என்பது பக்தர்கள் நம்பிக்கை.

e-magazine
aanmeegamalar.com

# சங்கடஹர சதுர்த்தி பிறந்த கதை

e-magazin
aanmeegamalar.com

வசிஷ்டரின் பரம்பரையில் தோன்றிய பரத்வாஜ மகரிஷி ஒரு சமயம் நர்மதை நதிக்கரையில் தவம் செய்து கொண்டிருந்தார். அப்போது நதியில் நீராடிக் கொண்டிருந்த மங்கை ஒருத்தியைப் பார்த்து மனம் மயங்கினார். அவளை அவந்தி நகருக்கு அழைத்துச் சென்று இல்லறம் நடத்தி னார்.

ஆன்மிகமலர்

அவர்களுக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அந்த மங்கையோ தேவலோகத்துக்குத் திரும்பிச் சென்றாள். பரத்வாஜ மகரிஷியும் அவந்தி நகரிலேயே குழந்தையை விட்டு விட்டு நர்மதை நதிக் கரைக்கு சென்று பாதியில் விட்ட தவத்தை மீண்டும் தொடர்ந்தார்.

அந்த குழந்தையை பூமாதேவி அரவணைத்து வளர்த்து வந்தாள். குழந்தையின் மேனி செந்நிறத் துடன் அக்னி போல் ஒளி வீசியதால் அவனுக்கு அங்காரகன் என்று பெயர் சூட்டினாள். அங் காரனுக்கு ஏழு வயது பூர்த்தியடைந்தது.

ஒருநாள் அவன் பூமாதேவியிடம், அம்மா என் தந்தை யார் என்று சொல். அவரை பார்க்க நான் ஆவலாக இருக்கிறேன் என்று கேட்டான் உடனே அவள் குழந்தாய் உன் தந்தையின் பெயர் பரத்வாஜர்.

மகரிஷிகளில் தலை சிறந்தவர். அவரிடம் உன்னை அழைத்துச் சென்று உன் ஆவலை நிறைவேற்றுகிறேன் என்று கூறி அவனுடன் பரத் வாஜர் ஆசிரமத்தை அடைந்தாள்.

அங்கு மகரிஷியைச் சந்தித்து மகரிஷியே இவனே உன் மகன் உங்களைச் சந்திக்க விரும் பியதால் இங்கு அழைத்து வந்தேன். தாங்கள்



இவனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேண்டினாள்.

மகிழ்ந்த மகரிஷி அன்புடன் தன் மகனை அணைத்துக் கொண்டார். அங்காரகன் உரிய வயதை அடைந்ததும் முறைப்படி அவனுக்கு உப நயனம் முதலிய சடங்குகளைச் செய்து வைத்து வேத அத்யனத்தையும் துவக்கி வைத்தார்.

மிகக் குறுகிய காலத்திலேயே கற்றுத் தேர்ந்த அவன் மற்ற பல கலைகளிலும் சிறந்து விளங்கினான். ஒருநாள் தன் தந்தையிடம் அங்காரகன் தான் சர்வ கலைகளிலும் வல்லமை பெற விரும்புவதாகவும் அதற்கேற்ற வழியைக் காட்டும்படியும் வேண்டினான்.

தவத்தைக் காட்டிலும் சிறந்த வழி எதுவும் இல்லை. அதனால் நீ விநாயகரைக் குறித்து தவம் செய் என்றார் பரத்வாஜர். உரிய மந்திரங்க ளையும் அவனுக்கு உபதேசித்து அனுப்பி வைத் தார்.

அவந்தி நகரை அடுத்த அடர்ந்த காட்டில் உரிய இடத்தைக் தேர்ந்தெடுத்து ஒரு நல்ல நாளில் தன் தவத்தை மேற்கெண்டான். பல நூறு வருடங்கள் கடுமையாக தவம் செய்த அவனுக்குப் பலன் கிடைக்கும் காலம் கனிந்தது.

மாசி மாதம் கிருஷ்ண பட்சம் சதுர்த்தியன்று இரவு சந்திரோதய காலத்தில் அங்காரனுக்கு தரிசனம் தந்தார் விநாயகர். அவரின் பாத கமலங்களைப் பணிந்து அவரைப் பலவாறு துதித்துப் போற்றினான்.

இறுதியாக விக்னேஸ்வரா தங்க ளிடம் நான் சில வரங்களை பெற விரும்புகிறேன். அருள் புரியுங்கள் என்று வேண்டினான். அங்கார கனே உன் கடும்தவத்தால் கட்டுண்டேன். விரும் பும் வரம் எதுவாக இருந்தாலும் தயங்காமல் கேள் என்று விநாயகர் திருவாய் மலர்ந் தருளினார்.

லம்போதரனே நான் அமிர்தம் அருந்தி அமரனாக ஆசைப்படுகி றேன். சர்வ மங்களமான உருவத்தோடு தங்களை தரி சித்த என்னை அனைவரும் மங்களன் என்று அழைக்க வேண்டும்.

அது மட்டுமல்ல, இந்த சதுர்த்தி நன்னாளை அனைவரும் கொண்டாட வேண்டும். இந்நாளில் தங்களை வணங்கி வழிபடும் பக்தர்களின் துயரங்களை நீக்கி அருள வேண்டும்.

மேலும் என்னை வணங்கும் அடியவர்களுக்கு செல்வம் அளிக்கும் கிரகமாக நான் மிளிர வேண்டும் என்ற பலவரங்களை வேண்டினான் கனிவான பார்வையுடன் நோக்கிய கணபதி அன்பனே! நீ கேட்ட எல்லா வரங்களையும் தருகிறேன்.

அத்துடன் என்னிடம் நீ அனுகிரகம் பெற்ற இந்த சதுர்த்தி நாள் சங்கடஹர சதுர்த்தியா கவும் போற்றப்படும். இந்த நாளில் திரிகரண சுத்தியுடன் என்னை வழிபடுபவர்களுக்கு சங்கடங்களை அடியோடு விலக்கி விடுவேன் என்று அருளி மறைந்தார்.

ஸ்ரீ விநாயகர் திரிசனம் கிடைத்த அந்த இடத் தில் கணபதி விக்கிரகத்தை பிரதிஷ்டை செய் து அவரை வழிபட்டு வந்தான் அங்காரகன். இதனால் இந்த விநாயகருக்கு மங்கள விநாயகர் என்ற பெயர் ஏற்பட்டது. பிறகு விநாயகரின் அருளால் தேவலோகம் அடைந்த அங்காரகன் அங்கு தேவாமிர்தம் பருகியதுடன் நவகிரகங்களில் ஒருவனாகும் பேறு பெற்றான்.





e-magazine
aanmeegamalar.com

# பரிகார ஸ்தலங்கள்

## திருமணத்தடை நீங்க

- திருச்செந்தூர்,
- திருமணஞ்சேரி,
- காளஹஸ்தி,
- திருப்பதி,
- மாயவரம்,
- மேதா தட்சிணா மூர்த்தி.

## குழந்தை பாக்கியத்திற்கு

- ஆலங்குடி,
- சென்னை திருவுடை அம்மன்,
- இருக்கன்குடி மாரியம்மன்,
- தென்குடித் திட்டை குரு பகவான்.

## மேல் படிப்பில் வெற்றிபெற

- திருப்பதி மூகாம்பிகை அம்மன்,
- திருவொற்றியூர் வடிவுடை அம்மன்.

## வழக்கில் ஜெயிக்க, செய்வினை ஒழிய:

- அனுமந்தபுரம் வீரபத்ர சுவாமி,
- வெக்காளி அம்மன்,
- மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி,
- பண்ணாரி அம்மன்.

## ஆன்மீகத்தில் தெளிவு வர:

- திருவண்ணாமலை,
- திருவாலங் காடு,
- பிள்ளையார்பட்டி,
- மதுரை மீனாட்சி திருவலிதாயம் தட்சிணாமூர்த்தி.

## கடன் பிரச்சனை நீங்க:

- மாங்காடு காமாட்சி,
- மதுரை பாண்டி கோவில்,
- சுசீந்திரம் தாணுலிங்கேஸ்வரர்,
- திருவனந்தபுரம் ஆற்றுகரை அம்மன்.



ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# எமன் தொடர்புடைய கோவில்களில் நவக்கிரக சன்னதி இருப்பதில்லை

பொதுவாக நவகிரகங்கள் இல்லாத கோவில்களே இல்லை என்று சொல்லுமளவிற்கு தமிழகத்தில் அனைத்து சிவாலயங்களிலும் நவக்கிரக சன்னிதி இடம் பெற்றிருக்கும்...

நவக்கிரகங்கள் இல்லாத பிரசித்தி பெற்ற புராதன சிவாலயங்கள் கோளிலி (கோள் இல்லா) தலங்கள் எனப்படுகின்றன...

எங்கெல்லாம் எமன் சிவனை வழிபட்டுள்ளாரோ அங்கெல்லாம் நவகிரகங்கள் இருக்காது...

அவற்றில் சில கோவில்களைப் பார்ப்போம்...

திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலில் நவகிரகம் இல்லை ஏனென்றால் அங்கு எமன் வந்து வழிபட்ட தலம்...

திருநள்ளாறு தர்பாரண்யேஸ்வரர் கோயிலிலும் நவகிரக சந்நதி இல்லை. அங்கும் எமன் வந்து வழிபட்டதாகக் கூறப்படுகிறது...

ஸ்ரீவாஞ்சியம். இங்கு எமனுக்கு முக்கியத்துவம். இங்கு எமன் சிவனை வழிபட்டதாக ஐதீகம்...


திருவாவடுதுறை. இங்கு எமன் சிவனை வழிபட்டதாக வரலாறுகள் உள்ளன...

திருப்பைஞ்சீலி, வாழை மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட சிவஸ்தலம். திருச்சிக்கு அருகில் உள்ள இந்த தலத்திலும் நவகிரகங்கள் கிடையாது...

திருக்கடையூர் மானிடர்களின் உயிரைப் பறித்த எமனுக்கு சிவன் இங்கு மறுபடியும் உயிரை எடுக்கும் அதிகாரம் வழங்கியதாக ஐதீகம்...

திருமழபாடி. திருவையாற்றுக்கு அருகில் உள்ளது. அங்கும் நவகிரக சந்நிதி இல்லை...

திருப்புறம்பியம். இங்கும் நவக்கிரகம் கிடையாது...






e-magazine
aanmeegamalar.com

# இராமனின் தாயை துதிப்பதுதான் சுப்ரபாதம்

சுப்ரபாதம் ராமபிரானை துதிப்பதாகத்தான் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் உண்மையில் இராமனின் பெருமையை கூறுவதுபோல அவரின் தாயார் கௌசல்யாவை புகழ்ந்து கூறுவதுதான் சுப்ரபாதம் என்பதை ஆழ்ந்து கூர்ந்து கவனித்தால் புரியும்.

விஸ்வாமித்திரரின் யாகத்தினை காக்க சென்ற போது, கங்கைக்கரையில், ராம லட்சுமணர்கள் தங்களை மறந்து தூங்கிக் கொண்டு இருந்தனர்.

அவர்களை அழைத்துக் கொண்டு வந்த விஸ்வாமித்திரர், அதிகாலைப் பொழுதில் எழுந்து, கங்கையில் நீராடி, ஜப தபங்களையெல்லாம் முடித்து விட்டு, ராம லட்சுணர்களை எழுப்புகிறார்.



பிரம்ம முகூர்த்த காலத்தில் எழுப்பத் தொடங்கியவர், ஆதித்யன் பிரத்யக்ஷமாகும் வரைக்கும் எழுப்பிக் கொண்டே இருக்கிறாராம்!

இரண்டு பேரும் எழுந்திருக்கவே இல்லை. உடனே, 'கௌசல்யா சுப்ரஜா. கௌசல்யா சுப்ரஜா.' என்று சொல்லிக் கொண்டே எழுப்பினாராம்.

இன்று ஒரு நாள், இந்த தெய்வக் குழந்தையை எழுப்பும் பேற்றினை நான் பெற்றேன். ஆனால், தினமும் இவனை எழுப்பும் பேற்றினை ராமனை பெற்ற கோசலை என்னும் கௌசல்யா எத்தனை அரிய பேற்றினை பெற்றவள். அதனால் அவளை தொழுதவாறு ராமனை இவ்வாறு எழுப்புகிறார்.

கோசலையின் தவ புதல்வா !
ராமா! கிழக்கில் விடியல்
வருகின்றதே! எழுந்திட்டு
புலிபோல் மனிதா செய்திடுவாய் இறைகடமை!

இந்த கௌசல்யா சுப்ரஜான்ற வால்மீகியின் வார்த்தையினை கொண்டே ஸ்ரீஹஸ்தகிரி அனந் தாசாரியலு என்பவர் எழுதினார்.

அவர் எழுதிய அந்த பாடல்களே இன்றைக்கும் திருப்பதியில் எம்.எஸ்.சுப்புலட்சுமி குரலில் பாடலாய் ஒலிக்கிறது.

பகவான் ஸ்ரீராமபிரானை எழுப்புவதற்கு, 'கௌ சல்யா சுப்ரஜா' என ஏன் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும் ? என்ன அர்த்தம் இதற்கு ?

அதாவது, 'இப்பேர்ப்பட்ட மகிமை மிக்க ராம பிரானைப் பெற்றெடுத்த கௌசல்யையே! நீ என்ன விரதம் மேற்கொண்டு, இந்த வரத்தை பெற்றாயோ.' என்று ஸ்ரீராம பிரானின் புகழை மறை முகமாகச் சொல்லிவிட்டு, அவனுடைய தாயாரை வாயார, மனதாரப் புகழ்கிறார் விஸ்வாமித்திரர்.


# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

தொடர்பு எண்: 9444228203
இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com



# மாயை



நாரதர் ஒரு சமயம் கிருஷ்ணரை தரிசிக்க சென்றார். அவரை கிருஷ்ணர் ஆசிர்வதித்தார். இருவரும் உரையாடியபடியே உலாவச்சென்றார்கள்.

அப்போது நாரதர் “கிருஷ்ணா..! உங்களுடைய மாயை மிகவும் வலிமை வாய்ந்தது என்று சொல்கிறார்கள். அது உண்மைதானா..? மேலும்

“என்னை தேவரிஷி என்று எல்லோரும் அழைக்கிறார்கள். பிரம்மத்தை (தெய்வத்தை) உணர்ந்த பிரம்ம ஞானியாகிய என்னை உங்களுடைய மாயை என்ன செய்யும்.. மாயையால் நானும் பாதிக்கப்படுவேனா.?

அதைக்கேட்ட கிருஷ்ணர் (மனதுக்குள் சிரித்த படி) நேரிடையாக பதில் சொல்லாமல், சற்று தொலைவில் உள்ள ஒரு ஊரைக் காண்பித்து, அங்கு சென்று குடிக்க கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருமாறு பணித்தார். பரந்தாமனின் கோரிக்கையை நிறைவேற்ற நாரதர் புறப்படுகிறார்.

சிறிது நேரம் நடந்த பிறகு வயல் வெளியும் மரங்களும் சில வீடுகளும் நாரதரின் கண்ணில் படுகின்றன. ஒரு அரச மரத்துக்குப் பக்கத்தில் இருக்கும் குடிசைக்குச் சென்று கதவைத் தட்டுகிறார்.

காத்திருக்கும் நேரத்தில் நாரதர் சுற்று முற்றும் பார்க்கிறார். பசுமையான மரங்கள், பல வித வண்ணம் கொண்ட மலர்கள், இனிய சங்கீதம் எழுப்பும் பறவைகள், சிறிது தொலைவில் ஒரு குளம், அதில் சில கொக்குகள். நாரதரின் உள்ளம் அந்த சூழலின் அழகில் மூழ்கித் தளும்புகிறது.

கதவு திறந்த ஓசை கேட்டுத் திரும்பிப் பார்க்கிறார். பார்த்ததும் அப்படியே உறைந்து நிற்கிறார். தேவலோகத்தில்கூட அவர் இப்படி ஒரு அழகைக் கண்டதில்லை.

முற்றும் துறந்த தேவரிஷியான நாரதரையே சலனம் கொள்ளச் செய்யும் பேரழகு கொண்ட அந்தப் பெண் புன்னகை புரிகிறாள். பணிந்து வணங்குகிறாள். கையில் இருந்த குவளையை மிகுந்த மரியாதையுடன் அவரிடம் தருகிறாள். அதில் இளநீர் இருக்கிறது. தேவாம்ருதத்தைவிடவும் அவருக்கு அது சுவையானதாகத் தோன்றுகிறது.

“உள்ளே வாருங்கள். தங்களுக்கு என்ன வேண்டும்?” என்று அந்தப் பெண் கை கூப்பிய வண்ணம் கேட்கிறாள்.

நாரதர் மந்திரத்துக்குக் கட்டுப்பட்ட சிறுவன் போல அவளைப் பின்தொடர்கிறார்.

“தங்களுக்கு என்ன வேண்டும்? உணவு கொண்டுவரட்டுமா?”

நாரதர் தலையசைக்கிறார்.

வசிய வலைக்குள் சிக்கியவர் பேசாமல் சாப்பிடுகிறார். சாப்பிட்டு முடிந்ததும் தாம்பூலம் தருகிறாள் அந்தப் பெண். நாரதரால் இதற்கு மேலும் பொறுமையாக இருக்க முடியவில்லை.

“பெண்ணே, நீ யார் என்று எனக்குத் தெரியாது. அது பற்றி எனக்கு அக்கறையும் இல்லை. உன்னைத் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன். நீ என்னைத் திருமணம் செய்து கொள்வாயா?” என்று கேட்கிறார்.

அந்தப் பேரழகி தலை கவிழ்கிறாள். “தாங்கள் என் தந்தையிடம் அல்லவா கேட்க வேண்டும்?” என்கிறாள்.

அவளது தந்தை வரும்வரை காத்திருக்கும் நாரதர், தந்தையிடம் பேசி அனுமதி வாங்குகிறார். திருமணமும் இனிதே முடிந்தது. அதே ஊரில் இருவரும் குடித்தனம் நடத்துகிறார்கள். அந்த ஊரின் அழகும் அமைதியும் தன் மனைவியின் பேரழகும் பெரும் குணமும் நாரதரைப் பெரிதும் கவர்ந்துவிட்டன.

சொர்க்கத்தில் இருப்பதைவிட மேலான வாழ்க்கையை வாழ்வதாக அவர் உணர்கிறார்.

பருவங்கள் மாறுகின்றன. புதுப்புதுப் பறவைகள் வந்து, சிறிது காலம் அங்கே இருந்துவிட்டுச் செல்கின்றன. மரங்கள் இலைகளை உதிர்க்கின்றன. மீண்டும் துளிர்க்கின்றன. மொட்டு பூவாகிக் காயாகிப் பழமாகிக் கனிந்து விழுகிறது. மீண்டும் இலைகள் உதிர்கின்றன.

நாரதருக்கும் அந்தப் பெண்ணுக்கும் இப்போது நான்கு குழந்தைகள். குழந்தைகள் வெளியில் விளையாடிக்கொண்டிருக்க, நாரதர் சாப்பிட்டுவிட்டு இளைப்பாறுகிறார்.

அப்போது மலையடிவாரத்திலிருந்து பெரும் ஓசை எழுகிறது. இடியைத் தொடர்ந்து திரண்டு வரும் மேகங்கள் மலையை மூடுகின்றன. பெரும் காற்று வீசத் தொடங்குகிறது. குழந்தைகளை அழைத்துக்கொண்டு உள்ளே போக முயற்சிப்பதற்குள் மழை பெரும் வீச்சுடன் மண்ணில் இறங்குகிறது. சில நொடிகளில் மழை வெளியெங்கும் பரவுகிறது.

வானுக்கும் பூமிக்கும் இடையில் விழுந்த திரைபோல் நிற்கிறது. மனைவியின் கூக்குரலைக் கேட்டுப் பரிதவிக்கிறார் நாரதர். குழந்தைகளின் அலறலும் ஈனஸ்வரத்தில் கேட்க நாரதரின் தவிப்பு அதிகரிக்கிறது. எழுந்து அவர்களை நோக்கி ஓடுகிறார். யாரையும் நெருங்க முடியவில்லை.





அலறிக்கொண்டே மழைத் திரையைக் கிழித்தபடி இங்கும் அங்கும் ஓடுகிறார். தன் கட்டுப்பாட்டை முற்றிலும் இழந்த நாரதர் வெள்ளத்தில் சிக்கிக்கொள்கிறார்.

நாரதர் சமாளித்து நீந்தத் தொடங்குகிறார். வீடு வெள்ளத்தில் அடித்துக்கொண்டு செல்வதைப் பார்க்கிறார். குழந்தைகளின் பிணங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுவதைப் பார்க்கிறார்.

பேரழகு கொண்ட மனைவி வெள்ளத்தில் மூழ்கித் தத்தளிப்பதைப் பார்க்கிறார். இதயம் பல துண்டுகளாகச் சிதறுவதுபோல் இருக்கிறது. பெருகும் கண்ணீருடன் தன் காதல் மனைவியை நெருங்குகிறார்.

வெள்ளம் அவருக்குக் கருணை காட்டவில்லை. அவரால் தன் மனைவியின் உயிரற்ற உடலைத்தான் மீட்க முடிகிறது. மழை குறைகிறது. வெள்ளம் வடிகிறது. காலம் கடந்து செல்வது குறித்த உணர்வு இன்றி நாரதர் அழுது கொண்டிருக்கிறார். உடல் களைப்பு அவரை மயக்கமடையச் செய்கிறது. மண்ணில் வீழ்கிறார்.

எழுந்து பார்க்கும்போது மரங்கள் இல்லை, வண்ணமயமான பூக்கள் இல்லை. குளம் இல்லை. குடிசை இல்லை. மனைவி, மக்கள் யாரும் இல்லை. சுற்றிலும் வெட்ட வெளி. நாரதர் ஒன்றும் புரியாமல் விழிக்கிறார். மனதில் வெறுமை சூழ்கிறது.

தொலைவில் ஒரு சலனம். யாரோ இருப்பது தெரிகிறது. நாரதர் எழுந்து நடக்கிறார். அந்த உருவத்தை நெருங்குகிறார். அவருக்கு மிகவும் பரிச்சயமான முகம்.

அவர் உதடுகள் தம்மையறியாமல் பிரிகின்றன. நாக்கு அசைகிறது. "நாராயணா..."

பரந்தாமன் நாரதரைப் பார்க்கிறார். முகத்தில் அதே மாய புன்னகை. "நாரதரே குடிக்கத் தண்ணீர் கேட்டேனே, எங்கே?"

மாயை என்றால் என்னவென்று, தான் கிருஷ்ணரிடம் கேட்ட கேள்வி நாரதருக்கு நினைவுக்கு வருகிறது. "பகவானே..! நான் கர்வம் கொண்டதற்கு என்னை மன்னியுங்கள். உங்கள் மாயை மிகவும் பலம் வாய்ந்தது உண்மைதான். மாயைக்கு நான் ஒருபோதும் வசப்படாமல் இருக்க வேண்டும் என்று என்னை ஆசீர்வதியுங்கள்" என்று வணங்கி கேட்டுக்கொண்டார். கிருஷ்ணரும் நாரதரின் பிரார்த்தனையை ஏற்று ஆசீர்வதித்தார்.

வாழ்க்கை என்ற ஒன்று இருக்கும் வரை இது போன்ற மாயை இருந்து கொண்டேதான் இருக்கும். இதிலிருந்து விடுபட ஒரே வழி இறைவனை சரணடைவது தான்.

"முக்குணங்களால் ஆன என்னுடைய இந்த மாயை தெய்வீகமானது. யாராலும் கடக்க முடியாதது. ஆனால் யார் என்னையே சரணடைகிறார்களோ, அவர்கள் இந்த மாயை கடக்கிறார்கள்"..!

– பகவத்கீதை 7.14






e-magazine
aanmeegamalar.com

# வாத்தலை நாச்சியம்மன் கோவிலில்
# வேண்டுதல் மணியை உள்வாங்கும் மரம்

தஞ்சையில், குடமுருட்டி ஆற்றை ஒட்டிய ஊரே கண்டமங்கலம். திருக்காட்டுப்பள்ளியின் அருகில் அமைந்திருக்கிறது. இது.. வளமான இந்த ஊரின் வளமைக்கும் வாழ்வுக்கும் காரணமாக, அவ்வூர் மக்கள், ஸ்ரீ வாத்தலை நாச்சியம்மனின் அருளையே குறிப்பிடுகின்றனர்.

அம்மன், இவ்வூரில் எழுந்தருளிய வரலாறு மிக அதிசயமானது. திருக்கோயில், எளிமையான சுற்றுச் சுவருடன் கூடியதாக அமைந்திருக்கிறது. உயரமான முன் மண்டபத்தில், ஸ்ரீ வாராஹி தேவி அருளுகின்றாள். அங்கு, ஸ்ரீ கணபதியையும், ஸ்ரீபாலசுப்பிரமணியரையும் தரிசிக்கலாம். அதை அடுத்து, அன்னை அருளாட்சி செய்யும் கருவறை.

நான்கு திருக்கரங்களுடன், இடது திருக்காலை மடித்து, வலது திருவடி கீழிருக்குமாறு அமர்ந்த திருக்கோலத்தில் அருளுகிறாள் அம்பிகை. பெரும்பாலான கிராம தேவதைகள் அமர்ந்திருக்கும் இந்த நிலையினை, 'சுகாசனம்' என்பது வழக்கம். அம்மன், தன் நான்கு திருக் கரங்களில் முறையே சூலம், அங்குசம், பாசம், அன்னக்கிண்ணம் முதலியவற்றைத் தாங்கி அருளுகின்றாள்.

கோயிலின் திருச்சுற்றில், ஸ்தல விருட்சமான வேப்பமரம். மிக அதிசயமானதொரு வேப்ப மரம் இது.. இதில் ஆங்காங்கே முண்டும் முடிச்சுமாக இருக்கிறது. அவற்றில், ஒன்றிரண்டிலிருந்து, பளபளவென எதுவோ தெரிகிறது. இதைப் பற்றிய விவரம் அதிசயமானது!.. இத்திருக்கோயிலில் வேண்டுதல் செய்பவர்கள், அது




ஆன்மிகமலர்





நிறை வேறியதும், மணிகளைக் காணிக்கையாகச் செலுத்தும் வழக்கமிருக்கிறது.

ஸ்தல விருட்சத்தில் அடிக்கப்பட்ட மணியை, காலப்போக்கில் மரமே மெல்ல உள்வாங்கி, தன்னுள் மறைத்துக் கொள்கிறது என்கிறார்கள். மரத்தை நெருங்கிப் பார்த்தால், இது உண்மை என்றே புலனாகிறது. பெரும்பாலான மணிகளின் கீழ்ப்புறம் மரத்துக்கு வெளியேயும், மேற்புறம் மரத்துக்குள் மறைந்தும் இருக்கிறது !!!!.

சுற்றுச் சுவரை ஒட்டிய சிறு சந்நிதிகளில் அம்மனின் பரிவார தேவதைகளான மதுரை வீரன், முத்து வழியான், மாமுண்டிக் கருப்பு, முத்தாளு இராவுத்தர் ஆகியோர் அருளுகிறார்கள்..

ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமி திருகோயில், கண்டமங்கலம் வற்றாத நீரும் வளம் கொழிக்கும் காவிரியும் முற்றாத வாழைமுகம் பார்க்கும் கொள்ளிடமும் வெண்ணாரிடை உயர்ந்த வீரத்தமிழ் சுவையும் ஒருங்கே பெற்ற பொன்னி நதிபாயும் புண்ணியஸ்தலங்கள் பல காவிரியின் தென்கரையில் உள்ளன.

அவற்றில் பூதலூர் வட்டம், வெங்கடசமுத்திரம் என்ற கண்டமங்கலம் கிராமத்தில் பழமைவாய்ந்த மூலவர் ஸ்ரீதேவி பூமாதேவி ஸமேதராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வெங்கடேச பெருமாளும், உற்சவர் ருக்மணி ஸத்யபாமா ஸமேதராய் அருள்மிகு ஸ்ரீ வேணுகோபால ஸ்வாமியும் கிழக்கு முகமாக அமர்ந்து அருள்பாலிக்கின்றனர்.

இது கி.பி. 18, 19 ஆம் நூற்றாண்டு மராட்டி யர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோவிலாகும். 108 சாளக்கிராம மாலைகள் அணிந்து பெருமாள் வீற்றிருக்கும் திவ்ய தேசமாகும். மேலும் தெற்கு முகமாக ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் அருள்பாலிக்கும் திவ்யதேசம்.

கல்வியில் மேம்படவும், திருமண தடை நீங்கி திருமணம் விரைவில் நடைபெறவும், புத்திர பாக்கியம் ஏற்படவும், அனைத்து வித மான காரியங்களிலும் வெற்றி பெறவும், ஸ்ரீ பக்த ஆஞ்சநேயருக்கு தேங்காய் கட்டி வழி பட்டு அனேக கோடி பக்தர்கள் பயன்பெற்று



வருகின்றனர். .

ஸ்ரீ கைலாசநாதர் திருகோவில், கண்டமங்கலம்

கண்டமங்கலம் எல்லைக்குள் இருப்பது “செந்தலை” என்னும் கிராமம் ஆகும். அங்கு “சந்திரலேகை” என்ற பண்பு நிறைந்த தாசிப் பெண்ணொருத்தி இறைவனைக் குறித்துத் தியானத்தை மேற்க்கொண்டிருந்தாள். அப்போது சிவபெருமான் அவள் கனவில் தோன்றி வேங்கட சமுத்திரத்திற்கு வரும்படி ஆணை யிட்டாராம். அதன்படி சந்திரலேகை இங்கு வந்து கயிலாசநாதரைத் தரிசித்து மகிழ்ச்சி பொங்க, “கண்டேன் மங்கலம்” என்றாளாம். அது முதல் வேங்கட சமுத்திரம் கண்டமங்கலம் என்று அழைக்கப்படுகிறது.


இத்தல அம்பாள் மிகவும் சக்தி வாய்ந்தள் என்பது பக்தர்களின் நம்பிக்கை. இத்திருகோவிலில் பத்து நாட்கள் விநாயகர் உற்சவம் நடை பெறுவது

ஆன்மிகமலர்



e-magazine
aanmeegamalar.com

e-magazine
aanmeegamalar.com



சிறப்பாகும். விநாயகர் சதுர்த்தி அன்று அவரவர் இல்லத்தில் செய்த கொழுக் கட்டைகள் கணபதி திருச்சன்னதியில் படைக்கப்படுகிறது.

வெளிப்பிரகாரத்தில் உள்ள விநாயகர், சுப்பிரமணியர், நவகிரகங்கள், நந்திகேஸ்வரர், நடராஜர், சிவகாமி, சூரியன், பைரவர் உள்ளனர். வேங்கட சமுத்திரம் என்பது இவ்வூரின் பண்டைய காலப் பெயர் ஆகும்.

இக்கோவிலில் மூலவர் கைலாசநாதர், தாயார் இராஜஇராஜேஸ்வரி ஆவர். இக்கோவிலில் சிறப்புத் திருவிழாக்கள் விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, தனுர் மாதம், சிவராத்திரி, பூரம் ஆகியவையாகும்.

– துரை சந்திரசேகரன்

Mobile: +91 77570 66081

## திருமண வரமருளும் அஷ்டமி யாகம்

கும்பகோணத்திலிருந்து 5 கி.மீ.தொலைவில் உள்ளது, நாதன்கோயில். இங்கு சுக்லபட்ச அஷ்டமி நாளில், ஸ்ரீஸூக்தயாகம் சிறப்பாக நடைபெறுகிறது. திருமணத்தடை உள்ளவர்கள், தொடர்ந்து எட்டு அஷ்டமி யாகங்களில் கலந்து கொண்டு, செண்பகவல்லித் தாயாரை தரிசித்தால், தடைகள் அகன்று திருமணம் நிச்சயமாகிறது. தம்பதியர், இந்த யாகத்தை தரிசிக்க, அவர்களிடையே ஒற்றுமை ஓங்கும் என நம்பப்படுகிறது.



## கால்வைத்தாலே போதும் அனைத்தையும் தரும் ஸ்தலம்

திருவாரூர் மாவட்டம் பேரளம் அருகில் உள்ள திருக்கொடியலூர் ஆனந்தவல்லி சமேத அகத்தீஸ்வரர் ஆலயம்.



இத்தலம் எமதர்மனும், சனி பகவானும் பிறந்த தலம் என்று சொல்லப்படுகிறது.

ஒருவருக்கு சனி தோஷம் பிடித்தாலும், எமன் பிடிக்க வந்தாலும் அது வாழ்வில் கஷ்டமான காலம்தான். ஆனால் இவர்கள் பிறந்த இத்தலத்தில் குழந்தையாய், அனைவருக்கும் அருள்தரும் வல்லுநராய், பக்தர்கள் கேட்ட வரத்தைத் தருபவர்களாகவே விளங்குகிறார்கள். அதனால்தான் இந்த தலத்தில் கால் வைத்த உடனேயே நமக்கு அனைத்தும் கிடைக்கிறது.

# காசியில் கருடனுக்கு வரம் தந்த சூரியன்

கஷ்யப முனிவருக்கு பல மனைவிகள் இருந்தனர், அவர்களில் இருவர் கத்ரு மற்றும் வினதா. கத்ரு பாம்புக் குழந்தைகளையும், வினதா பெரிய பறவையான கருடனையும் பெற்றெடுத்தாள்.


சகோதரிகள் இருவரும் விளையாட்டுத் தனமாக இருந்தனர். கத்ரு தந்திரமாக இருக்கும்போது, வினதா மிகவும் அப்பாவியாக இருந்தாள்.

ஒருமுறை கத்ரு, தன் மனதில் ஒரு உள்நோக்கத்துடன் வினதாவிடம் ஒரு யூக விளையாட்டை விளையாடச் சொன்னாள், விளையாட்டில் தோற்கும் சகோதரி வெற்றியாளருக்கு அடிமையாகிவிடுவாள். வினதா சம்மதித்தாள். "சூரியனின் தேரை இழுக்கும் குதிரைகளில் ஒன்றான உச்சைஸ்ரவத்தின் நிறம் என்ன" என்பதுதான் யூக விளையாட்டு. வெள்ளை நிறம் என்பதும். அதற்கேற்ப வினதா சொன்னதும் நன்றாகவே தெரிந்தது.

ஆனால் கத்ருவின் மனதில் வேறு விளையாட்டுத் திட்டம் இருந்தது. அவளுடைய வற்புறுத்தலின் பேரில், அவளுடைய குழந்தைகள் (பாம்புகள்) உச்சைஸ்ரவா என்ற குதிரையின் வாலைச் சுற்றிக் கொண்டு விஷத்தைக் கக்கத் தொடங்கின. குதிரையின் நிறம் சாம்பல் கலந்த கருப்பு ஆனது.

வினதா விளையாட்டில் தோற்று கத்ரு மற்றும் அவளது பாம்பு மகன்களுக்கு அடிமையானாள். அவள் மிகவும் நோய்வாய்ப்பட்டாள். அவளுடைய மகன் கருடன் அவளுடைய பரிதாபகரமான நிலையைக் கண்டு மிகவும் வேதனைப்பட்டார்.

தன் தாயை விடுவிக்குமாறு கத்ருவின் மகன்களிடம் முறையிட்டான். கருடன் அவர்களுக்கு அமிர்தம் கொண்டு வர வேண்டும் என்ற ஒரு நிபந்தனையின் பேரில் அவர்கள் அவ்வாறு செய்ய ஒப்புக்கொண்டனர்.



e-magazine
aanmeegamalar.com



தேவர்களால் அமிர்தத்தை நெருக்கமாகப் பாதுகாத்ததால், இது கடினமான பணி என்று கருடன் அறிந்தார். இருப்பினும், ஒரு கடமையான மகனாக, கருடன் தேவ லோக்கிற்குப் புறப்பட்டுச் சென்றார். இந்த வழியில், அவர் விஷ்ணுவுடன் சண்டையிட வேண்டியிருந்தது. கருடன் தனது தாயின் மீது கொண்டிருந்த மரியாதை மற்றும் தனது மகப்பேறு கடமையில் ஆழ்ந்திருப்பதை கண்டு விஷ்ணு பகவான் மகிழ்ச்சி அடைந்தார். இனிமேல் அவர் (கருடன்) விஷ்ணுவின் வாகனமாக இருப்பார் என்று கருடனிடம் கூறினார்.

அமிர்தத்தைப் பொறுத்தவரை விஷ்ணு தனது தாயை விடுவிக்க கருடனை பாம்புக் குழந்தைகளுக்கு மீட்க அனுமதித்தார்.

ஆனால் எந்த சூழ்நிலையிலும் பாம்புகள் அதை குடிக்கக்கூடாது என்று எச்சரித்தார். கருடன் அமிர்தத்தை எடுத்து பாம்பு குழந்தைகளுக்கு கொடுத்தார்.

உடன்படிக்கையின்படி பாம்புகளால் அவரது தாயார் விடுவிக்கப்பட்டார். அவர்கள் அமிர்தத்தை உட்கொள்வதற்கு முன், கருடன் அவர்களிடம் அமிர்தம் தூய்மையான அமுதம் என்றும், அதை உட்கொள்ள விரும்பும் ஒருவர் முதலில் புனித நீராடுவதன் மூலம் தன்னைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்றும் கூறினார். அதன்படி பாம்புகள் அமிர்தம் அடங்கிய பாத்திரத்தை காய்ந்த புல்லால் ஆன பாயில் வைத்து நீராட கிளம்பின.

அவர்கள் இல்லாத நேரத்தில், விஷ்ணு அந்த பாத்திரத்தை எடுத்துக்கொண்டு மறைந்தார். ஏனென்றால் அது பாம்புகளுக்கு சொந்தமானது அல்ல.

பாம்புகள் திரும்பி வந்ததும்,பாத்திரம் காணாமல் போனதைக் கண்டு வேதனையடைந்து, ஒரு துளி அமிர்தத்தையாவது பெற வேண்டும் என்ற நோக்கத்தில் அவை பாயை நக்க ஆரம்பித்தன. உலர்ந்த புல் மிகவும் கூர்மையாக இருந்தது, அது அவர்களின்




e-magazine
aanmeegamalar.com

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.



e-magazine
aanmeegamalar.com





ககோல்க் ஆதித்யா

நாக்கை வெட்டியது. இன்றுவரை, பாம்புகள் தாங்கள் சரியாக சம்பாதிக்காத ஒன்றை சாப்பிட முயற்சித்ததால், ஒரு வெட்டப்பட்ட நாக்குடன் (Forked Tongue) பிறக்கிறது. இப்போதும் கூட சரியான முறையில் சம்பாதித்த பொருட்களை மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும் அல்லது உட்கொள்ள வேண்டும் என்று பெரியவர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

பின்னர், வினதா தன் மகன் கருடனிடம், தான் ஏதோ பாவம் செய்திருக்க வேண்டும் என்று சொன்னாள். அவள் தன் பாவங்களுக்குப் பரிகாரம் செய்ய காசிக்குச் செல்ல விரும்பினாள்.

கருடன் அவளை காசிக்கு அழைத்துச் சென்றார். அங்கு கருடன் ஒரு சிவலிங்கத்தை நிறுவி தீவிரமாக பிரார்த்தனை செய்யத் தொடங்கினார். வினதா சூரிய பகவானை ககோல்க் ஆதித்யராக அவரது வடிவில் வணங்கத் தொடங்கினார். சிவபெருமான் நேரில் தோன்றி கருடனை ஆசீர்வதித்தார்.

கருடன் விஷ்ணுவின் வாகனம் என்று உலகில் உள்ள அனைவராலும் அறியப் படுவார் என்று கூறினார்.

சூரிய பகவானும் வினதாவின் முன் நேரில் தோன்றி அவளை ஆசீர்வதித்தார். அதன் பிறகு வினதா தனது அனைத்து பாவங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டார் காசி காண்டம். அத்தியாயம் 50 இன் படி ககோல்க் ஆதித்யா பில்பிலா தீர்த்தத்தின் அருகாமையில் குறிப்பிடப்படுகிறார்.


ககோல்க் ஆதித்யாவை பூஜிக்கும் பக்தர்கள் வாழ்க்கையில் வெற்றியும் செழிப்பும் பெறு வார்கள். இந்த கோவில் விரஜா என்ற சக்திபீடத்தில் வருகின்றது. ஆக, இங்கு செய்யப்படும் எந்த பூஜையும் பன்மடங்கு நன்மைகளை தரும்.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

# சத்துமாவு

## Sathu maavu



**41 வகையான சிறுதானியங்களில் தயாரிக்கப்பட்டது குழந்தைகளுக்கு அனைத்து சத்துக்களும் அடங்கியது**

**200 கிராம்......... 120 ரூபாய்**

**SPECIAL OFFER**

## 41 ingredients

Ragi, Samba wheat, Rye, White corn, Black gram, Green gram, Millet, Black cowni rice, Sorghum, Bamboo rice, White chickpeas, Black chickpeas, Roasted groundnuts, White soybeans, Horsetail rice, Millet rice, Varaku rice, Samai rice, White Ellur, Black rice, White Awal Sukku, Cucumber seed, Pumpkin seed, Barley, Groom samba, Cashew nut, Almond nut, Walnut, Double beans, Maize, Cardamom, Red Rice, Pistachio Nut, Edible Rice, Biryani Rice, Red Soya Beans, Gatti Elephant Rice, Unity Rice, Darbis Seed, Hindu Salt,



home made products



கீதாசமையல்

**SPECIAL FOOD**

fssai REGISTRATION 22424543000080

7550199561

geethasamayalspacialfood@gmail.com

home made products

Multigrain Porridge is the most healthy breakfast. It is rich in minerals and has high fibre content that keeps blood sugar under control.

தேவைப்படுபவர்கள் மேலே உள்ள வாட்சப் எண்ணிற்கு மெசேஜ் அனுப்பவும்

# வேதங்கள் பாம்புகளை அஹி என்ற பெயரில் அழைக்கிறது



பாம்புகளை வழிபடுவது அவற்றின் மீதுள்ள அச்சமே காரணம் என்ற கருத்து தவருதலானது பாம்புகளுக்குள் பல சூட்சம சக்திகள் நிறைந்துள்ளன எனவே தான் பாம்புகளை மக்கள் வழிபட துவங்கினார்கள் என்பதை சென்ற பதிவில் பார்த்தோம். கிரேக்கம், ரோமாபுரி ஆகிய மேற்கத்திய நாகரீகத்தில் நாக வழிபாடு என்ற பாம்பு வணக்கம் மிகுதியாக இருந்தது என்றாலும் அந்த வழிபாட்டிற்கு பல காலத்திற்கு முன்பே இந்தியாவில் பாம்புகளை வழிபடும் முறையானது எல்லா இடங்களிலும் பரவி இருப்பதற்கான ஆதாரங்கள் நிறையவே கிடைக்கின்றன.

**கடவுள் உருவாக்கிய மதம்**


வேத காலம் முற்பட்டதா? சிந்துசமவெளி நாகரீக காலம் முற்பட்டதா? என்ற வாதங்கள் வரலாற்று ஆய்வாளர்கள் மத்தியில் பலகாலமாக நீடித்துவருவது நமக்கு தெரியும். நிச்சயமாக அவர்களால் சிந்துசமவெளி பகுதிகளில் கிடைத்த எழுத்துக்களை சரியான முறையில் படித்தறிய முடியாத காலம் வரை காலத்தால் முற்பட்டது இது தான் என்ற தீர்வுக்கு வர இயலாது. ஆனாலும் நாம் இரண்டையுமே சமமான கண்ணோட்டத்தோடு பார்த்து நமது இந்து சமய வரலாற்று ஆய்வில் சில வழிபாட்டுக்குரிய

காலநிலையை கணக்கிடும் போது எடுத்துகொள்ள வேண்டும். அப்படி எடுத்க்கொண்டால் மட்டுமே பக்கசார்பு இல்லாமல் அதாவது வடபுலத்து வழிபாடு தென்புலத்து வழிபாடு என்ற பேதங்கள் இல்லாமல் முழுமையனவற்றை சிந்தனை செய்ய முடியும்.

இதுவரை கண்டெடுக்கப்பட்டுள்ள சிந்துசமவெளி முத்திரைகள் செப்பேடுகள் போன்றவற்றின் நாகங்களை தெய்வங்களாக சித்தரிக்கும் சில சின்னங்கள் கிடைத்துள்ளன. தெய்வீக சின்னங்களை தனியாக அடையாள படுத்தி காத்துவதற்கு என்னமாதிரியான குறியீடுகளை அக்கால மக்கள் பயன்படுத்தினார்களோ அதே போன்ற குறியீடுகளை நாக வடிவங்களை சித்தரிக்கும் போது கையாண்டுள்ளார்கள். இப்படிப்பட்ட இரண்டு முத்திரைகள் இதுவரை கிடைத்துள்ளன. இன்னும் சில முத்திரைகள் சிதைந்த வடிவத்தில் இருப்பதனால் அவற்றை ஆராய்கின்ற பணியும். நடந்து வருகிறது.

சிந்துவெளி நாகரீகத்தில் பாம்புகளை வழிபட்டதன் அடையாளமாக சில முத்திரைகளை நாம் காண்பதை போலவே வேதகாலத்திலும் நாக வழிபாட்டுக்குரிய சின்னங்கள் வேத பாடல்களின் வடிவமாக நமக்கு கிடைக்கிறது. ரிக் வேதத்தில் அதிகமாக நாகங்களை பற்றிய குறிப்பு இல்லை என்றாலும் யஜுர் வேதத்தில் பல இடங்களிலும் நாகங்கள் சிறப்பித்து கூறபடுகின்றன. நோய்களை அகற்றி மக்களை ஆரோக்கியத்தோடு வாழ செய்வதற்கு நாக தெய்வங்கள் உதவி புரிவதாக வேத பாடல்கள் பல போற்றி புகழ்கின்றன.

நாம் நினைப்பது போல வேதங்கள் பாம்புகளை நாகங்கள் என்றோ சர்பங்கள் என்றோ அழைக்கவில்லை அஹி என்ற பெயரில் நாகங்கள் அழைக்க படுகின்றன. அஹி என்ற சொல்லுக்கு பாம்பு என்ற பொருள் மட்டுமல்ல அணிகலன்கள் என்ற பொருளும் இருக்கின்றன. பாம்புகள் இறைவனான சிவபெருமானின் அணிகலன்களாகவும் இருப்பதனால் இந்த சிறப்பு பெயர்களை வைத்து அவைகளை அழைக்கபட்டிருக்கலாம் என்று எண்ணுவதற்கும் அதிக இடம் இருக்கிறது. பொதுவாக யஜுர் வேத பாடல்கள் பல பாஞ்சால நாட்டில் வாழ்ந்த ரிஷிகள் பலரால் கண்டறிய பட்டதாகும். பாஞ் சால நாட்டின் தலைநகரமே அஹிசத்திரம் என்ற பெயரை கொண்டது. இதை வைத்து பார்க்கும் போதும் இந்நகரத்தின் காவல் தெய்வமாக ஆதி நாகம் என்ற நாகம் இருப்பதாக சொல்லபடுவதை பார்க்கும் போதும் பாஞ்சால நாட்டில் நாக வழிபாடு



சிறப்பாக இருந்தது என்ற முடிவுக்கும் நம்மால் வர முடிகிறது.

இதுமட்டும் அல்ல பாஞ்சால தேசத்து அரசர்களில் [illegible] அக்கினி மித்திரன் பானு [illegible] காலத்து நாணயங்களிலும் பாம்பு உருவங்கள் மிக அழகாக செதுக்கப்பட்டுள்ளது. அதர்வண வேதத்திலும் அதற்கு பின்பு தோன்றிய மற்ற பல நூல்களிலும் நாகங்கள் தெய்வாம்சம் பொருந்தியவைகள் என்ற குறிப்புகள் இருப்பதோடு நாகர்கள் என்ற இனமும் தெய்வ தன்மை வாய்ந்தது என்ற சிறப்பு குறிப்பும் இருக்கிறது.

பொதுவாக இந்தியாவில் எந்தவொரு தனி மனிதனும் தன்னை பற்றியும் தனது வம்சத்தை பற்றியும் குறிப்பிடும் போது தாங்கள் ஓர் அரசனின் வழிவந்தவர்களாகவோ செல்வந்தர்களின் வாரிசுகளாகவோ சொல்லி கொள்வது கிடையாது. மாறாக ஒருமுனிவரின் ரிஷியின் வழிதோன்றல்களாகவே சொல்லி கொள்வார்கள்.

உதாரணமாக காஷியப கோத்திரம், கௌடல்ய கோத்திரம் என்று அழைக்கபடுவது எல்லாம் ரிஷிகளின் பெயர்களே ஆகும். அந்த வகையில் நாகர்கள் என்ற கோத்திரம் நாகங்களின் வாரிசுகள் என்றே சொல்லலாம்.

மனித நிலையிலிருந்து மாற்றம் அடைந்து தெய்வ நிலைக்கு ஒருவன் செல்வதற்கு வழிகாட்ட கூடிய பாதை யோக மார்க்கம் என்று நமக்கு தெரியும். இந்த யோக மார்க்கத்தை உருவாக்கியவர் பதஞ்சலி மகரிஷி ஆவார். பதஞ்சலி மகரிஷியின் உருவத்தை சிலையாக வடிக்கும் வழிவகைகளை காட்டுகின்ற பல சில்ப சாஸ்திர நூல்கள் அவரை நாகத்தின் தலை கொண்டவராகவே அடையாளம் காட்டுகின்றன. இதை அடிப்படையாக வைத்து பார்க்கும் போது நாகர்கள் என்ற இனத்தின் மூதாதையாக பதஞ்சலி மகரிஷியே இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. ஆதிகால இந்திய வரலாற்றில் நாகர் இனம் ஆற்றியிருக்கும் தொண்டுகள் மிக பெரியது.

நாகர் வம்சத்தில் வந்த அரசர்களை பற்றி குறிப்புகள் இலக்கியங்களிலும் புராணங்களிலும் மலிந்து கிடக்கின்றன. அவற்றின் துணை கொண்ண்டு ஆராயும் போது நாகர்கள் ஆரியர்கள் அல்லாத தனியினத்தை சார்ந்தவர்கள் என்று தெரிகிறது. மகததேசத்தை அரசாண்ட சைசுநாகர் என்ற மன்னரே நாக மன்னர்களில் மிகவும் காலத்தால் முற்பட்டவர் என்று சொல்லலாம். அவருக்கு பின்வந்த சிசுநாகன் நாகதர்ஷகன் போன்றோர்களும் குறிப்பிட தக்க அரசர்களே ஆவார்கள். இவர்கள் அனைவருமே நாகங்களை வழிபடுவதில் முனைப்பு காட்டினார்கள் என்ற விவரங்கள் தாராளமாக கிடைக்கின்றன.

குஷானர்களின் ஆதிக்கம் குறைந்த பிறகு விதிஷா, காந்திபுரி, மதுரா, பத்மாவதி போன்ற இடங்களில் அரசாண்ட நாக மன்னர்களை பற்றிய விவரங்களை புராணங்கள் தருகின்றன. அவர்களில் சேஷன், சந்திராம்ஷன், போகி போன்றவர்கள் விதிஷா நகரை தலைநகராக கொண்டு அரசாண்டார்கள். கி.பி நான்காம் நூற்றாண்டு வரை வட இந்தியாவில் பல பகுதிகளில் நகர்களின் அரசாங்கம் இருந்ததாக நாணயங்கள் சாசனங்கள் போன்றவைகள் தெளிவாக காட்டுகின்றன. தற்போது பாகிஸ்தான் நாட்டிலுள்ள லாகூர் நகரத்தில் கி.பி நான்காம் நூற்றாண்டை சேர்ந்த செப்பேடு ஒன்றில் நாகபட்டன் என்ற அரசனின் மகனான மகேந்திர நாகன் என்பவனது சிறப்புகள் சொல்லப்பட்டுள்ளன. அதே போல வாகடக அரசன் ருத்ர சேனனின்




தாய்மாமனான குவேர நாகன் என்பவனும் செயற்கரிய பல செயல்களை செய்து மக்களுக்கு வேளாண்மை வழியில் தொண்டுகள் புரிந்ததாக அறிய முடிகிறது.

குவேர நாகன் மூன்றாம் நூற்றாண்டின் கடேசி பகுதியிலோ நான்காம் நூற்றாண்டின் துவக்கத்திலோ வாழ்ந்திருக்க வேண்டும். இவன் சிவபெருமானின் வடிவமான சிவலிங்கத்தை தோள்களில் சுமந்தவன்னமே வாழ்வின் பெரும் பகுதியை கழித்ததாகவும் இதனால் மகிழ்ச்சி அடைந்த சிவபெருமான் இவனை பராசிவ குலத்து மன்னனாக ஆகியதாகவும் ஒரு ஐதீகம் இருக்கிறது. பராசிவ குலம் என்பது ஆகாயத் திலிருந்து கங்கையை பூமியை நோக்கி இறங்கி வர செய்த பகிரதனின் குலம் என்றும் சொல்கிறார்கள்.

குஷானர்களின் ஆதிக்கத்திற்கு பிறகு பலமிக்க அரசகுலமாக பராசிவ நாகர்குலம் இருந்தது


e-magazine
aanmeegamalar.com



வீர முத்திரைகளை பதித்திருக்கிறார்கள். அதன் விளைவாகவே நாகபட்டினம், நாகர்கோவில் போன்ற ஊர்களுக்கு நாகர்களின் பெயர்கள் வைக்கபட்டிருக்கின்றன. நாகத்தை மட்டுமே வழிபடுகின்ற மக்களாக நாகலாந்து மக்கள் பண்டைய காலத்தில் இருந்ததனால் அந்த பகுதி நாகலாந்து அல்லது நாக பூமி என்ற பெயரை பெற்றது. ஒரு வம்சமே நாகர் குலம் என்று அழைக்கபட்டிருப்பதினால் நாக வழிபாடு இந்தியாவில் எத்தகைய சிறப்பு பெற்றதாக இருந்தது என்பதை எண்ணி பார்க்க வேண்டும்.

வடமொழியில் எழுதப்பட்ட கிருஹய சூத்திரம் என்பது நாகர்களின் சிறப்புகளை விரிவாக எடுத்து சொல்கிறது. நாகர்கள் வணக்க தக்கவர்கள் பூலோகம் வானுலகம் சொர்கலோகம் போன்ற உலகங்களின் நான்கு திசைகளுக்கும் அதிபதிகளாக இருப்பவர்கள் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. நித்தேஷ என்ற பௌத்த மத நூலும் நாக வழிபாட்டின் சிறப்புகளை பலவாறு புகழ்ந்து சொல்கிறது. அந்த நூல் பகவா நாகோ என்ற சிறப்பு பெயரை பாம்புகளுக்கு தருகிறது. அதாவது வணக்கத்திற்குரிய நாகம் என்பது இதன் பொருளாகும்.

நாகங்களுக்கு என்று தனித்தனியான வழிபாட்டு கூடங்களை ஏற்படுத்துவதற்கு அக்காலத்திய மன்னர்கள் பலர் விரும்பி இருக்கிறார்கள். பொதுமக்கள் புனித காரியங்களுக்காக மட்டுமே பயன்படுத்துகின்ற நீர் நிலைகளின் அருகில் நாக சிலைகள் வடிவமைத்து மக்கள் வழிபட செய்திருக்கிறார்கள். ஹாவிஷ்க என்னும் குஷான மன்னன் பிரதிஷ்டை செய்த நாகங்களுக்கான கோவில் சில முஸ்லிம் மன்னர்களால் தரைமட்டமாக்க பட்டது. அந்த கோவிலின் மிச்ச மீதி அடையாளமாக கிடைத்த ஒரு சிறிய நாக சிலையும் கனிஷ்க மன்னன் எட்டாம் நூற்றாண்டில் செதுக்கிய நாக வடிவம் ஒன்றும் மதுரா அருகாட்சியகத்தில் இன்றும் வைக்கப்பட்டுள்ளது.

சிவன் விஷ்ணுவை தனி தெய்வமாக மக்கள் வழிபட்டதை போலவே நாகங்களையும் மக்கள் தனி தெய்வமாக ஆதி காலத்தில் வணக்கி இருக்கிறார்கள். அதன் பிறகே நாகங்கள் பரிகார தெய்வங்களின் அந்தஸ்தை பெற்று கீழ்நிலை படுத்த பட்டிருக்கிறது. காலம் செல்ல செல்ல நாகங்கள்

என்பது குறிப்பிட தக்கதாகும். இந்த குலத்தில் வந்த பவனாகன் என்ற மன்னனின் பெயர் எழுதிய நாணயங்கள் பல பதம் பவாய எனுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது குவாலியருக்கு அருகில் உள்ள நர்வார் என்ற நகரத்தின் அருகில் உள்ள பகுதியாகும். இதன் புராண கால பெயர் பத்மாவதி நாகர்களோடு குப்த வம்சத்து மன்னர்கள் மிக நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்கள். சமூத்திர குப்தனின் மகனான இரண்டாம் சந்திர குப்தன் நாகர் வம்சத்து இளவரசியான குபேரநாகை என்பவளை மணந்து தனது பட்டத்து ராணியாக ஆக்கி கொண்டான். குப்த வம்சம் பெரும்புகழ் பெற்றது என்றால் அது நாகர்களின் பலம் பொருந்திய தொடர்பால் மட்டுமே என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

நாகர்கள் இந்தியாவில் வடக்கே இருந்து தெற்கு வரை பல பகுதிகளை ஆண்டிருக்கிறார்கள். அல்லது தனது



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

aanmeegamalar.com



இறந்து போன மூதாதையர்களின் வடிவங்களாக கருதி ஆவி வழிபாட்டில் நாக தேவதைகள் இணைக்கப்பட்டு விட்டார்கள். இருந்தாலும் நாக வழிபாட்டின் தாக்கம் என்பது மக்கள் மனதை விட்டு சிறிது கூட விலகவில்லை என்று உறுதியாக சொல்லலாம். வைதீக சமயமான சனாதன தர்மம் சற்று அமைதியாக இருந்த போது புத்துயிர் பெற்றிருந்த பௌத்த மதம் நாக வழிபாட்டை கைவிட்டு விடவில்லை. முஷிலிந்த எலாபத்த என்ற இரண்டு நாகங்கள் புத்தரை சரணடைந்ததாகவும் அவர் அதற்கு அபயம் வழங்கியதாகவும் பௌத்த மத புராணங்கள் கூறுகின்றன.

புத்த மதத்திற்கு முந்திய மதமான ஜைன மதத்தில் பார்ஷ்வ நாதர் என்ற ஜைன தீர்த்தங்கரின் முக்கிய சின்னமாக பாம்புகள் மட்டுமே திகழ்கின்றன. இந்து மத இலக்கியங்களில் மிகவும் புகழ்பெற்ற பாகவத புராணத்தில் ஸ்ரீ மத் கிருஷ்ண பரமாத்மா காளிங்கன் என்ற நாகத்தின் தலையின் மீது நர்த்தனம் ஆடியது புகழ்பெற்ற நிகழ்வாகும். இது தவிர இந்து மத புராணங்களில் பல இடங்களிலும் பாம்குகளுக்கு சிறப்பான தனியிடம் கொடுக்கபட்டிருக்கிறது. சிவன் துர்க்கை சூரியன் கணபதி போன்ற தெய்வங்களுக்கு நாகங்களே ஆபரணங்களாக அமைந்துள்ளதை மறக்க முடியாது. ஹரி வம்சம் என்ற நூல் ஆதி சேஷனின் அவதாரமான பலராமனை வழிபடுவதன் மூலம் சகல சுகங்களையும் பெறலாம் என்று தெளிவாக சொல்லுகின்றன. மகாபாரத அனுஷாசன பர்வதத்தில் இந்த கருத்து கூறபட்டிருப்பதை நினைவு கூற வேண்டும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் நீ யாரை வழிபட்டாலும் கடேசியில் வந்து என்னிடமே சேர்வாய் என்று சொல்கிறார். அதாவது மாமன் மச்சான் என்று ஆயிரம் உறவுகள் இருந்தாலும் ஒரு மனிதனின் இறப்பிற்கு பிறகு அவன் கூடவே வருவது அவனது நியாய தர்மங்களே என்பது நமது மதத்தின் ஆதார சுருதியாகும்.

நியாய தர்மங்கள் இருந்தால் மட்டுமே மகாவிஷ்ணுவின் நெருக்கம் கிடைக்கும் என்பது மகாபாரதத்தில் உள்ள அனுஷாசன பர்வத்தின் குறிப்புகளாகும். நியாய தர்மங்களை மட்டுமே

வாழ்க்கை துணையாக கொண்டு கடந்து செல்வதற்கு ஆதிஷேசனின் அம்சமான பலதேவனின் அருள் இருக்க வேண்டும் என்று சொல்லபடுகிறது. பலதேவனை வழிபடுவதன் மூலமாக வராக அவதாரத்தின் அனுக்ரகத்தை அடையலாம் என்று நம்பப்படுகிறது.

பல தொன்மைவாய்ந்த சிற்பங்களில் பகவான் வராக அவதாரத்தில் வருகின்ற போது அவரது திருபாத கமலங்களை தாங்கி கொள்வதற்கு சேஷன் தயாராக இருக்கிறான். என்பதை எடுத்து காட்ட வராக சிற்பத்தின் ஒற்றை காலை தாங்கி பிடித்த வண்ணம் சேஷன் இருப்பதை அறியலாம். இந்தியாவின் மூலை முடுக்குகளில் கிடைக்கின்ற பல சிற்பங்களிலும் ஓவியங்களிலும் நாக வழிபாட்டின் சிறப்புகள் பரவி கிடப்பதை அறிய முடிகிறது. மனித உடம்பும் பாம்பு தலையும் அல்லது பாம்பு உடம்பும் மனித தலையும் உடைய படைப்புகளை பார்க்கும் போது மனிதனுக்கும் நாகத்திற்கும் உள்ள தொடர்பு எந்த அளவு பின்னிபிணைந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

ஆன்மிகமலர்

பாம்பை கண்டால் படையும் நடுங்கும் என்பதை ஆரம்பத்தில் பார்த்தோம் ஆனால் அதே பாம்பை வழிபட கூடிய நிலையில் வரும் போது இந்தியாவில் யாரும் அவைகளை பார்த்து பயந்ததாக தெரியவில்லை. புறநானூறு போன்ற பழைய தமிழ் இலக்கியங்களில் சீறிவரும் புலியை சிறு முறத்தை கொண்டு தாக்கி விரட்டிய பெண்மணிகளை பற்றி அறிய முடியறது. அது நிஜமா? நடக்க கூடியதா? என்ற சந்தேகம் நமக்கு வருகின்ற போது நாக பஞ்சமி தினத்தன்று நமது பெண்கள் படமெடுத்து ஆடுகின்ற நல்ல பாம்பை தைரியமாக தொட்டு குங்குமம் வைத்து கற்பூர ஆராத்தி காட்டி வழிபடுவதை பார்த்தால் இவள் புலியை விரட்டியது புளுகு மூட்டையல்ல என்று தோன்றும்.

எந்தவொரு வழிபாட்டு முறையும் காரண காரியம் இல்லாமல் வருவது கிடையாது. அதுவும் குறிப்பாக நாக வழிபாடு என்பது சிந்துசமவெளி நாகரீக காலம் தொட்டே மனிதர் வாழ்வில் நீங்காத இடத்தை பெற்றுள்ளது என்றால் அதற்கு ஆழமான காரணங்கள் இல்லாமல் இருக்க முடியாது. அந்த காரணம் என்னவென்று தெரிந்து கொண்டால் மட்டுமே நாக வழிபாட்டின் சிறப்புகளை நம்மால் உணர முடியும். எனவே அதை பற்றி அடுத்து சிந்திப்போம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்




நமது இதழுக்கு விருப்ப சந்தா செலுத்த விருப்பமுள்ளவர்கள்

UPI மற்றும் வங்கி வாயிலாகவும் செலுத்துங்கள்...

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA
(KODAMBAKKAM BRANCH)

ஆன்மிகமலர் மெயில் புக்

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க












## aanmeegamalar.com

## இணையதளத்தை

## பார்க்கவும்












## ஒருமணிநேரம் மட்டுமே திறந்திருக்கும்

# மதுரை பாதாள குபேர பைரவர்

aanmeegamalar.com

மதுரை என்றாலே அன்னை மீனாட்சிதான் நினைவிற்கு வரும், அன்னை மீனாட்சியின் ஆளுமையின் கீழ் இயங்கும் மதுரையில் பல்வேறு சுவாரஸ்யமான கோவில்கள் உள்ளன.

ஒருசில கோவில்களைப் பற்றி பலருக்கு தெரியாமல் அறியாமலே இருப்பது வேதனை என்றாலும், தற்போது அந்தக் கோவில்கள் பற்றி தெரிந்து மக்கள் அக்கோவிலை நாடி வருவது மகிழ்ச்சியான செய்தி.

இந்த வகையில், மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் உட்புறம் மற்றும் வெளிப்புறத்தில் பலவிதமான சுவாரசியமான சுவாமி சன்னதிகள் இருக்கின்றன. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் வெளிப்புறத்தில் இருக்கக்கூடிய சுவாரசியமான கோவில்களில் ஒன்றுதான் பாதாள குபேர பைரவர் கோவில்.

மதுரை வடக்கு கோபுர வாசல் மேற்கு கோபுர வாசல் சந்திக்கும் இடத்தில் மீனாட்சி அம்மன் கோவில் பூந்தோட்ட வளாகத்தில் சரியாக தினமும் ராகு கால நேரத்தில் மட்டுமே திறந்து பூஜைகள் நடக்கும் அற்புத “குபேர பாதாள பைரவர் கோவில்” அமைந்துள்ளது.

இந்த கோவிலின் சன்னதி ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் மட்டுமே திறக்கப்படும். அதாவது ஒரு நாளைக்கு வரக்கூடிய ராகு காலத்தில் மட்டுமே கோவிலின் சன்னதி திறக்கப்பட்டு பூஜைகள் செய்யப்படும் என்பது சிறப்புகளாக இருக்கின்றது.



e-magazine
aanmeegamalar.com

அதாவது அக்காலகட்டத்தில் இருந்து ராகு காலத்தில் மட்டும் இக்கோவில் திறக்கப்பட்டு வந்ததால் தற்பொழுது வரை அதே நடைமுறை பின்பற்றப்படுகிறது. அதுவும் ராகு காலத்தில் நடை திறக்கப்பட்டு இராகு காலம் முடியும் நேரத்தில் நடை சாத்தப்படும். இராகு காலத்தில் மட்டுமே இந்த பைரவருக்கு பூஜைகள் நடைபெறும்.

திங்கள் ..............7.30 முதல் 9 வரை

செவ்வாய்...........3 முதல் 4.30 வரை

புதன் ..................12 மணி முதல் 1.30வரை

வியாழன்............1.30 மணி முதல் 3.00 வரை

வெள்ளி .............10.30 முதல் 12 வரை

சனி ....................9 முதல் 10.30 வரை

ஞாயிறு ..............4.30 மணி முதல் 6 வரை

மட்டுமே இந்த கோவில் திறக்கப்பட்டு பூஜைகள் நடைபெறுகிறது.

ஒரு மணி நேரம் மட்டுமே திறக்கப்படும் இந்த பாதாள குபேர பைரவரை வழிபடுவதன் மூலமாக செல்வ செழிப்பிற்கு பஞ்சம் இருக்காது என்றும் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகள் தீர வழி வகுக்கக் கூடியவையாகவும், திரு மண தடை, குழந்தை பாக்கியம், நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ வழிவகுக்கும் என்று சொல்லப்படுகின்றது.

இந்த பைரவர் பாதாள குபேர பைரவராக காட்சியளிப்பதால் செல்வச் செழிப்பிற்கு பஞ்சம் இருக்காது. அது மட்டும் அல்லாது குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகள், தடைகள், சிக்கல்கள், பில்லி, சூனியம் என அனைத்தையும் விரட்டி அடிக்கிறார்.

பக்தர்கள் வேண்டும் வேண்டுதலுக்கு உடனே செவிசாய்த்து வேண்டுதலை நிறைவேற்றுகிறார்.

பூர்வ ஜென்ம பலன் இருப்பவரால் மட்டுமே இந்த பைரவரை தரிசிக்க முடியும். ராகு காலத் தில் மட்டும் திறக்கப்பட்டு பூஜை செய்யப்படும் இந்த குபேர பைரவர் சக்தி வாய்ந்த பைரவராக இருப்ப தினால் மக்கள் அனைவருமே மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வந்தால் இக்கோவிலுக்கு வந்து குபேர பைரவரை தரிசனம் செய்யாமல் செல்ல மாட்டார்கள் என்றும் கூறப்படுகின்றது.



அழகுராஜா

ஒருகாலத்தில் இந்தக் கோவில் இருப்பதே தெரியாமல் இருந்தது, இந்தக் கோவிலைச் சுற்றி ரிக்ஷா ஓட்டிகள் ஆக்கிரமித்திருந்த காரணத்தால் இக்கோவில் பூட்டியே இருந்துள்ளது, காலப் போக்கில் மீனாட்சி ஆலயம் புதுப்பொலிவு பெற்ற காலத்திலி கோவிலைச் சுற்றி இருந்த குடியிருப்பு, ஆக்கிரமிப்புகள் அகற்றிய சமயத்தில்தான் இக்கோவிலைப் பற்றி தெரியவந்தது.

அதன்பின் இச்சன்னதியை புதுப்பித்து நாள் தோளும் ஒருமணிநேரம் ராகுகால நேரத்தில் மட்டுமே திறந்து வழிபாடு நடைபெற்று வருகிறது.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182



e-magazine

aanmeegamalar.com

# துவாதசியின் முக்கியத்துவம்!

"வாசுதேவ துவாதசி என்பது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை வழிபட சிறந்த நாள். சாதுர்மாஸ்ய என்பது மழைக்காலத்தின் புனித மாதங்கள் காலத்தின் தொடக்கம். மகாவிஷ்ணுவுக்கு பஞ் சாமிர்த வழிபாடு செய்வது சிறப்பானதாகும். இந்நாளில் அரிசி, பழங்கள், ஆடைகள் தானம் செய்வது மங்களகரமானதாக கருதப்படுகிறது. விஷ்ணு சஹஸ்ரநாமம் , விஷ்ணுவின் மற்ற மந்திரங்களை படிப்பது நன்மை பயக்கும். இன்று பெருமாள், மகா லட்சுமி, கிருஷ்ணரை வழிபட சிறப்பான வாழ்வு அமையும். வீட்டில் விஷ்ணு சஹஸ்ரநாமம் பாடி பெருமாளை வழிபட வேண்டும். இதை செய்தால் சகலவிதமான நன்மைகளும் பல மடங்கு பெருகும்.!"

# நரசிம்ம வழிபாடு நன்மை தரும்!

"நரசிம்மரை சுவாதி நட்சத்திரத்தில் வழிபடுவது சிறந்த பலனை தரும். ஸ்ரீராமபிரானுக்கு துளசி மாலை சாற்றியும், பெருமாளை

பெரியாழ்வார் திருநட்சத்திரமன்று திருப்பல்லாண்டு பாசுரம் படித்து வழிபட வேண்டும். விரதம் இருந்து நரசிம்மரை வழிபட கடன் தொல்லைகள் நீங்கும்.

பஞ்சபூதங்களில் ஒன்றான காற்றுக்கு அதிபதி வாயு. வேகமாக செல்வதில் நிகரற்றது என்பதால், வாயுவேகம் மனோ வேகம் என்று சொல்வர். மனதில் எதை நினைத்தாலும், அந்தக் கணமே மனம் அங்கு சென்றுவிடும்.

மாருதி என்ற பெயரும் ஆஞ்சநேயருக்கு உண்டு. இதற்கு வாயுவின் பிள்ளை என்று பொருள். ஒவ்வொரு நட்சத்திரத்திற்கு ஒரு அதிதேவதை உண்டு. இதில் சுவாதிக்குரியவராக இருப்பவர் வாயு. பிரகலாதனுக்கு ஆபத்து நேர்ந்த சமயத்தில் இரண்யனிடம்



இருந்து காப்பதற்காக புயலைப் போல பறந்து வந்தவர் நரசிம்மர். எனவே அவருக்குரிய நட்சத்திரமாகவும் சுவாதி அமைந்ததுள்ளது. வாழ்வில் எவ்வளவு பிரச்னை இருந்தாலும் தீர்வுபெற நரசிம்மரை சுவாதியன்று வணங்குங்கள்.

# விநாயகரை பற்றிய அறிய தகவல்கள்!

- விநாயகர் என்றால் அவரை விட மேலான ஒருவர் இல்லை என்று அர்த்தமாகும்.
- பிள்ளையாருக்கு ஞானக் கொழுந்து என்றொரு பெயருண்டு. ஞானத்தை அருள்வதற்காக விநாயகர் அரச மரத்தடியில் அமர்ந்துள்ளார்.
- சென்னை தியாகராய நகரில் ஆக்ஸ்போர்டு பள்ளி வளாகத்தில் சித்தி சக்தியுடன் பத்துத் தலை கொண்ட வலஞ்சுழி விநாயகர் உள்ளார்.
- விக்னம் என்றால் கஷ்டம். கஷ்டங்களை அகற்றுபவர் என்பதால் விக்னேஸ்வரர் என்கிற பெயர் விநாயகருக்கு ஏற்பட்டது.
- விக்னங்கள் வராமல் நம்மை வேலி போல் காத்து ஆதரிப்பவர் விநாயகர்.
- விநாயகர் ஐந்து கரங்களைக் கொண்டு விளங்குவதினால் 'ஐங்கரன்' என்று அழைக்கப்படுகின்றார்.
- காரைக்காலினைச் சேர்ந்த தாமானங்குடி கிராமத்தில் உள்ள விநாயகர் கோவிலில் பெரிதும் சிறிதுமாய் இரண்டு விநாயகர் திருவுருவங்கள் உள்ளன. ஒன்று பிரெஞ்சு விநாயகர் மற்றொன்று இங்கிலீஷ் விநாயகர்.
- விநாயகர் சதுர்த்தி விழா மராட்டியத்திலும், ஆந்திராவிலும் 11 நாட்கள் வழிபாடாகக் கொண்டாடப்படுகின்றது.
- மராட்டியத்தில் தேங்காய்களை உடைத்து விநாயகருக்கு அர்ச்சனை செய்து பக்தர்களுக்கு வழங்குகிறார்கள்.
- மணிப்பூர் மாநிலத்தில் மைரி என்னும் மக்கள் மூங்கில் அரிசியைக் கணபதிக்கு நிவேதனம் செய்து வழிபாடு செய்கின்றார்கள்.
- எகிப்தில் உள்ள விநாயகர் தமது கையில் சாவி வைத்து இருக்கிறார். தம்மை வழிபாடு செய்பவர்களுக்கு இவர் சொர்க்கத்தின் வாசலைத் திறந்து விடுவார் என்னும் நம்பிக்கை மக்களிடம் உள்ளது.



- வைணவ கோவில்களில் அமைக்கப்பட்டுள்ள விநாயகர் தும்பிக்கையாழ்வார் என்று அழைக்கப்படுகின்றார்.
- கணபதிக்கும், சனீஸ்வரனுக்கும் பிரியமானது வன்னி மரம். எனவே, வன்னிமர இலைகளால் விநாயகப் பெருமானை வழிபட்டால் சனிபகவான் தொல்லைகள் நீங்கும்.
- கணபதி வழிபாடு என்பது காணா பத்யம் என்றழைக்கப்படுகிறது. இது ஆதிசங்கரர் சிறப்பித்த வழிபாடு ஆகும்.
- விநாயகப் பெருமான் சித்தி, புத்தி என்ற தம் மனைவியர் மூலம் உருவாக்கியவர் தான் சந்தோஷி மாதா ஆவார்.
- அசோகர் காலத்தில் அவர் மகள் சாருமதி நேபாளத் தில் விநாயகருக்குக் கோவில் கட்டினார்.
- புத்தர்கள் விநாயக வழிபாடு செய்கின்றார்கள்.
- விநாயகர் சதுர்த்தியைத் தொடர்ந்து ஒன்பது நாள் விநாயக விரதம் இருந்து வணங்குதல் விநாயக நவராத்திரி எனப்படும்.

– சௌமியா சுப்ரமணியன்
18, பத்மநாபன் தெரு, பழைய பல்லாவரம்
சென்னை 600117
தொலைபேசி எண்: 9940460969

# கட்டாய சந்தா இல்லை!

# சப்ஸ்கிரைப் இல்லை!!

# மாற்று மத திணிப்பு இல்லை!!!

**தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்**

## ஆன்மிகமலர்.காம் வழங்கும் ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

**ஒரே கிளிக் 180 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்**

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# மனக்கவலைகள் நீக்கும் புதுதில்லி க்யாலா ஸ்ரீ தேவி கருமாரியம்மன்




புனித பாரத பூமியின் தலைநகரமான டெல்லி மாநகரத்தில் வடமேற்கு பகுதி க்யாலாவில் அமைந்துள்ளது ஸ்ரீ தேவி கருமாரியம்மன் திருக்கோயில். சுமார் அறுபது வருடங்களுக்கு முன்பு சுயம்புவாக தோன்றிய ஆதி சக்தியே முழுமுதற் கடவுள் கருமாரியாக இங்கு விளங்கி வருகிறாள். தெய்வீக சித்தர் காக பூசண்டி, இந்த பூஜா ஸ்தலத்திற்கு "உத்திர வேத பூமி" என்று பெயரிட்டார். அகஸ்திய முனிவரால் தேவியின் திருவிளக்கு தரிசனம் பெற்ற தலமே தற்போது ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் பூஜை ஸ்தலமாக (க்யாலா) இன்று திகழ்கிறது.

சிவன், விநாயகர், முருகன், ஆஞ்சநேயர், கால பைரவர், தக்ஷிணாமூர்த்தி, துர்க்கை, நவகிரகம் ஆகியோருக்கு தனி சன்னதிகள் உள்ளது. இத்துடன் நூதன ஸ்ரீ கோதண்ட ராமர், ஸ்ரீ தன்வந்திரி மற்றும் சப்த கன்னியர்களுக்கு சன்னதிகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.



ஆலய பிரகாரத்தில் நாகபுற்று உள்ளது. நாக தோஷம் உள்ளவர்கள் பிரதி வாரம் திங்கள் கிழமைகளில் புற்றுக்கு பால் ஊற்றி வருவதாலும் நாக பஞ்சமி அன்று விசேஷ ஆராதனை செய்வதாலும் நாக தோஷம் நிவர்த்தி ஆகிறது என்பது இங்கு நிதர்சனம். ராகு தோஷம் உள்ளவர்கள், திருமணம் ஆகாதவர்கள், திருமணம் தடைப்பட்டோர் மூன்றாவது வார முடிவில் வரன் தேட ஆரம்பித்தால் ஒன்பது வாரத்திற்குள்ளாக வரன் அமைந்து திருமணம் நடந்து வருவது இங்கு கண்கூடாக தெரிகிறது.

பிரதி வருடம் சித்திரை மாதம் பதினொரு நாள் உற்சவமாக அக்னி சட்டி எடுத்து தீக்குழி இறங்குதல் இத்தலத்தின் தனிப்பெரும் திருவிழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

நித்திய பூஜைகள் மற்றும் விசேஷ பூஜைகளான சதுர்த்தி, சஷ்டி, பௌர்ணமி, அமாவாசை, அஷ்டமி மற்றும் பிரதோஷம் நடைபெற்று வருகிறது.

வருடாந்திர பூஜைகளான சிவராத்திரி, நவராத்திரி, 108 சங்காபிஷேகம், அன்னாபிஷேகம், குரு, சனி, ராகு,கேது பெயர்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஆலயத்தில் பாலாலய பூஜை நடைபெற்று அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக திருப்பணி வேலைகள் செவ்வனே நடைபெற்று வருகிறது. கும்பாபிஷேகம் 2025ல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ருமாரியம்மன் அவளை நாடிவரும் பக்தர்களின் குறைகளை தீர்த்து, அவர்கள் வேண்டுதலை நிறைவேற்றித் தருகிறாள். வழி: பஸ்சிம் விஹார் மேற்கு மெட்ரோ நிலையத்தில் இருந்து 700 மீ மற்றும் ஜனக்புரி மேற்கு மெட்ரோ நிலையத்தில் இருந்து 3.8 கி.மீ. தொலைவில் உள்ளது. தொடர்புக்கு: 01128336146, 9871305767, 9818873438

e-magazine
aanmeegamalar.com

e-magazine
aanmeegamalar.com





# புதுடெல்லி ரோகிணியில் திருவிளக்கு பூஜை

ரோகிணியை சார்ந்த ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாம சத்சங்கம் கடந்த இருபது வருடங்களாக திருவிளக்கு பூஜை நடத்தி வருகின்றனர்.

திருவிளக்கு பூஜை வழிபாடு, இந்து மதத்தில் இடம் பெறும் ஒரு முறையாகும். இறைவனை ஒளிவடிவாக உருவகித்து நலன்களை வேண்டி நடத்தப்படும் வழிபாடாகும்

இந்த வருடமும், வியாச பௌர்ணமியை முன்னிட்டு, ரோகிணி செக்டார் 16ல் அமைந் துள்ள, மா ஆத்ய சக்தி தாம் மந்திரில், திரு விளக்கு பூஜை ஜூலை 21ம் தேதி சிறப்பாக நடைபெற்றது.

காலை 7.00 மணிக்கு, கே. வி. பரசுராம சாஸ்திரிகள் தலைமையில் கணபதி ஹோமத்துடன் நிகழ்ச்சி துவங்கியது. அதைத் தொடர்ந்து ஸ்ரீ ருத்ராபிஷேகம், ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம், சிறப்பு அலங்காரம் மற்றும் மஹா தீப ஆராதனை மிக விமரிசையாக நடந்தது.

உலக நன்மைக்காகவும், பெண் களின் மாங்கல்ய பாக்கியம் நிலைக்கவும், குழந்தைகள் நோய் நொடி இன்றி ஆரோக்கியமாக வாழவும், தில்லியில் போதிய பருவமழை வேண்டியும், சுமங்கலி பெண்கள் ஏராளமானோர் பங்கேற்று

தேங்காய், மஞ்சள், குங்குமம், சந்தனம், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், ஊதுபத்தி, கற்பூரம் எடுத்து வந்து குத்துவிளக்கு ஏற்றி பூஜை வழிபாடு செய்தனர். இதையடுத்து, வடு, கன்யா, தம்பதி பூஜைகள் நடத்தப்பட்டன.



டெல்லி தியாகராஜன்

நிகழ்ச்சியில் ஆன்மிக அன்பர்கள் திரளாக கலந்து கொண்டு மேலும் சிறப்பித்தனர். பங்கேற்ற அனைவருக்கும் அன்னதானம் வழங்கப் பட்டது. மாலை 6.30 மணிக்கு ராஜேஷ் சாஸ்திரிகள் நடத்தி வைத்த பகவதி சேவையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

–டெல்லி தியாகராஜன்
9868423215

ஆன்மிகத் தகவல்களை
எளிமையாக, பாமரர்களும் புரிந்து
கொள்ளும் வகையில்
ஆன்மிகமலர்மெயில்
புத்தகத்தில் (e-book)
வெளியிட்டு வருகிறோம்...

free

இதுவரை வெளிவந்த
180 க்கும் மேற்பட்ட
இதழ்களை



aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.

# ஆனைமுகன் வழிபட்ட அநேகதங்காபதேஸ்வரர்

கணபதி கச்சிமூதூர் எனப்படும் காஞ்சிபுரத்தில் புரிந்த லீலைகள் அனேகம்.

இரண்யபுரத்தை ஆட்சி செய்து வந்தான் கேசி என்னும் அரக்கன். அவனது முன்ஜென்ம வினையின் காரணமாக, கணபதியின் சக்தியான வல்லபை கேசியின் மகளாகப் பிறந்தாள். வல்லபை வளரும் பருவத்திலேயே சிறந்த சிவபக்தை யாக விளங்கினாள். சிவலிங்க பூஜை செய்வதில் அலாதி விருப்பம் கொண்டிருந்தாள். இதனால் கோபங்கொண்ட கேசி வல்லபையை அடிக்கடி சிவபூஜை செய்ய முடியாதபடி சிறைபூட்டி ஒளித்தான். இதனால் மனம் வாடினாள் மகேசரது மருமகள்.

இந்நிலைப்பாட்டினை அறிந்த ஆனைமுகர் கச்சிப் பதியிலே தீர்த்தம் உண்டாக்கி, லிங்கப்பிரதிஷ்டை செய்து, அப்பன் ஈசனை மனங்குளிர பூஜித்து வழிபட்டார்.

கேசியை அழிக்கும் ஆற்றலையும், வல்லபையை மணக்கும் வல்லமையையும் கயிலைநாதரிடம் பெற்ற கணேசர், பின் தனது வாகனமான மூஞ்சூர் மீதேறி, இரண்யபுரத்தை அடைந்து, கேசியிடம் போரிட்டு, கேசியை அழித்து, வல்லபையை மணந்தார். அதுமுதல் ஸ்ரீ வல்லபை கணபதி என்று போற்றப்பட்டார்.

அனேகபம் என்றால் யானை என்று பொருள். யானைமுகத்தோன் இங்கே சிவபெருமானை பூஜித்தக் காரணத்தால் “அனேக தங்காபதம்“ என்று ஆனது இப்பகுதி. வடநாட்டில் ஓர் அனேக தங்காபதம் இருப்பதனால் காஞ்சிபுரத்தின் ஓர் பகுதியாக விளங்கும் இத்திருத்தலம் “கச்சி

ஆன்மிகமலர்




e-magazine
aanmeegamalar.com







அனேக தங்காபதம்“ என்று வழங்கலானது. பிள்ளையார் வழிபட்ட காரணத்தால், தற்போது இப்பகுதி “பிள்ளையார்பாளையம்“ என்றே அழைக்கப்படுகின்றது.

இத்தல பெருமானை தனாதிபதியான குபேரனும் வழிபட்டு, வரம் பெற்றுள்ளான். காஞ்சி புராணத்தில் இத்தல நிகழ்வு அற்புதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. காஞ்சிபுரத்தில் உள்ள ஐந்து தேவாரத் திருத்தலங்களுல் இத்தலமும் ஒன்றாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் காஞ்சியில் தங்கி, இத்தலத்தின் மீது ஒரு பதிகம் பாடிப் போற்றியுள்ளார்.

காஞ்சி மாநகரில் பிள்ளையார்பாளையத்தின் கடைக்கோடியில் கயிலாசநாதர் ஆலயத்திற்கு முன்னே வடக்குமுக நுழைவுவாயிலுடன் நம்மை வரவேற்கின்றது அனேக தங்காபதீஸ்வரர் ஆலயம். நுழைவாயிலுள் நுழைந்து சற்று தூரம் நடந்து, வலப்புறம் திரும்பிட...கணபதி உண்டாக்கிய தீர்த்தம் காணப்படுகின்றது.

சில படிகள் இறங்கி, தீர்த்த நீரை தலையில் தெளித்துக்கொண்டு, இரண்டாம் நுழைவு வாயினுள் நுழைகின்றோம். இங்கே சிறிய கோபுரம் ஒன்று காணப்படுகிறது. கிழக்கு நோக்கிய சிறியதொரு ஆலயம்.

தென்மேற்கில் கணபதி மட்டும் சன்னிதி கொண்டுள்ளார். நடுநாயகமாக இறைவன் சன்னிதி அமைந்துள்ளது. பலிபீடம், நந்தி மண்டபம் தாண்டி நேராக சிவன் சன்னிதியை அடைகின்றோம். சிறிய முன் மண்டபம். அதில் வலதுபுறம் கணபதி குடிகொண்டுள்ளார்.

கருவறையில் வட்டவடிவான ஆவுடையுடன் அனேகபர் வணங்கி, வழிபட்ட ஸ்ரீ அனேக தங்காபதேஸ்வரர் லிங்கத் திருமேனியராக பச்சைக் கல்லால் ஆன மூர்த்தமாக அருட்காட்சி அருள்கின்றார். சிரம் தாழ்த்தி வணங்கிய பின்னர், சன்னிதியை வலம் வருகையில் முதலில் வடதிசை பார்த்தவாறு நால்வர் தரிசனம். பின் கோஷ்டமாடங்களில் முறையே ஸ்ரீ நர்த்தன கணபதி, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி, ஸ்ரீ திருமால், ஸ்ரீ பிரம்மா மற்றும் ஸ்ரீ துர்க்கை ஆகியோர் அருள்பாலிக்கின்றனர்.

வாயு திசையில் வள்ளி தெய்வானை உடனுறை ஸ்ரீ சுப்பிரமணி யர் சன்னிதி கொண்டுள்ளார்.

ஸ்ரீ சண்டிகேஸ்வரருக்கும் சன்னிதி உள்ளது. அம்பாள் சன்னிதி இங்கே கிடையாது. காரணம்... காஞ்சிபுரத்தில் உள்ள அனைத்து சிவாலயங்களுக்கும் ஒரே அம்பிகை சன்னதி ஸ்ரீ காமாட்சியம்மன் ஆலயம் மட்டுமே.

பல்லவர் கால திருக்கோயில். இரண்டாம் குலோத்துங்கன் திருப்பணி செய்துள்ளார்.

அலைமோதும் கூட்டம் இல்லை. ஆரவாரம் இல்லை. அமைதியான ஆலயம். தினமும் ஒரு கால பூஜை மட்டும் நடைபெறுகின்றது. சிவராத்



மோ.கணேஷ்

e-magazine
aanmeegamalar.com





திரி, அன்னாபிஷேகம் மட்டுமே வருடாந்திர நிகழ்ச்சியாக நடக்கின்றது. பிரதிவாத பிரதோஷங்களில் விசேட அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடத்தப்படுகின்றன.

கணபதி ஈசனிடம் வைத்த வேண்டுகோளின்படி இங்கு வழிபடுவோரது திருமணத் தடைகள் அகலும். திருமணங்கள் கைகூடும். நெடுநாட்கள் மணம் புரிய மறுக்கும நபர்கள் தாங்களே மனமுவந்து, திருமண நாட்டத்தை தெரிவிப்பார்கள்.

காஞ்சி மாநகரின் பிள்ளையார்பாளையத்தில் கயிலாசநாதர் ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ளது ஸ்ரீ அனேக தங்காபதேஸ்வரர் ஆலயம்.



பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்புக்கு: 9789156179.

# ஆன்மிக சேவையை பாராட்டலாம் வாங்க...

**பஜன்மண்டலியினர்,**

**ஆன்மிக சேவை செய்யும் அன்பர்கள்,**

**ஆன்மிக அமைப்புகள், உழவாரப்பணி,**

**கோவில் திருவிழாக்களில் சேவையாற்றும் அன்பர்கள்,**

**அன்னதானம் செய்பவர்கள்,**

**பல்வேறு ஆன்மிகபணி செய்யும் ஆன்மிக அன்பர்கள்**

மேற்கண்ட ஆன்மிக பணியை விரும்பி செய்யும் அன்பர்கள் தங்களைப் பற்றியும், தங்களது சேவையைப் பற்றியும் எங்களுக்கு தெரியப்படுத்தவும், தாங்கள் செய்யும் சேவையை புகைப்படத்துடன் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவோம்,

உங்களுடன் இணைந்து பணிசெய்ய விரும்பும் அன்பர்களுக்கு நமது ஆன்மிகமலர்.காம் இணையதளமும், இணையதள இதழும் பாலமாக செயல்படும்,

கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு தெரியப்படுத்தவும், அல்லது தொடர்பு கொள்ளவும்.

**வாட்சப் எண்: 9444228203**

# மதுரா அக்ஷயா கார்த்திக்கின் மாண்டலின் அரங்கேற்றம்



குருமார்களின் ஆசியுடன், குரு பூர்ணிமாவின் நன்னாளில் 2024 ஜூலை 21 அன்று குமாரி மதுரா அக்ஷயா கார்த்திக்கின் மாண்டலின் அரங்கேற்றம் சென்னை மயிலாப்பூரில் உள்ள RR சபாவில் வெற்றிகரமாக நடந்தது. அக்ஷயா தெற்கு கலிபோர்னியாவைச் சேர்ந்த பத்தாம் வகுப்பு படித்து வருகிறாா். ஸ்ரீமதியின் நாகமணி மற்றும் ராஜு (சாஸ்திரிய மாண்டோலின் சிக்ஷனா). வழிகாட்டுதலின் கீழ் கடந்த ஒன்பது ஆண்டுகளாக மாண்டலின் தேர்ச்சி பெற்று வருகிறாா். SIMA லாஸ் ஏஞ்சல்ஸ், DASC, சப்தமி (தேசிய அளவில் முதல் இடம்), பிசிலி கச்சேரிகள், வீணை மஹோத்ஸவம், காயத்ரி ஃபைன் ஆர்ட்ஸ், கார்வா டிரஸ்ட், ஸ்ரீ சங்கர மடம் காஞ் சிபுரம், ஆச்சார்ய நெட், ஜன் க்ருதி , வீணாவாதினி உட்பட பல இசை நிகழ்ச்சிகளில் அமெரிக்காவில் மற்றும் இந்தியாவில் அக்ஷயா தனது திறமையை வெளிப்படுத்தி உள்ளாா். மேலும் கலா ஸௌரபா 2K23. கலிபோர்னியாவின் சைப்ரஸ் நகரத்தில் இருந்து இசை உதவித் தொகையையும் பெற்றுள்ளாா்.



எஸ்.வெங்கடேசன்

அமெரிக்காவில் வசிக்கும் அவா், ஆன்லைன் வகுப்புகள் மூலம் இசையை கற்றுக் கொண்டாா். மிகச் சிறிய வயதிலிருந்தே, அவர் சிறந்த ஒழுக்கத்துடன் வகுப்புகளை கவனமாக பயிற்சி செய்தாா், அவள் ஒவ்வொரு வருடமும் கோடை விடுமுறைகளில் நேரில் பயிற்சி பெறுவதற்காக சென்னைக்கு செல்வாா். அவரது மதிப்பிற்குரிய குருக்கள் ஸ்ரீமதி U .நாகமணி மற்றும் ÿ. ».H. ராஜு அவா்களுக்கு எங்கள் மனமாா்ந்த நன்றியைத் தெரி



e-magazine
aanmeegamalar.com






வித்துக் கொள்கிறோம்.

U. P. ராஜு மற்றும் ஸ்ரீமதி. நாகமணி அவர்களின் விலைமதிப்பற்ற வழிகாட்டுதலுடன், அரங்கேற்றம் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் முக்கிய விருந்தினராக சென்னை பிரம்மஞான சபையைச் சேர்ந்த பால சுப்ரமணியன், சிறப்பு விருந்தினராக புதுதில்லி ஷண்முகானந்தா சங்கீத சபாவின் செயலாளர் கிருஷ்ணசாமி. S போன்ற சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு கௌரவித்தார்கள்.

மேலும் கலைஞர்கள் நெய்வேலி நாராயணன், டிரிப்ளிகேன் தவில் சேகர், நெற்குணம் சங்கர், பார்த்தசாரதி சுவாமி சபாவின் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, Arkay A S ராமகிருஷ்ணன் உள் ளிட்டோர் கலந்து கொண்டார்கள். அக்ஷயா 2 மணி நேர முழு நீள கர்நாடக இசை நிகழ்ச்சி அளித்தார்.

MM ஸ்ரீனிவாச ராவ் வயலின், கணபதி ராமன் மிருதங்கம், மற்றும் திருச்சி கே.முரளி கடம் வாசித்தனர் பைரவி அட தாள வர்ணத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது, அவளுடைய வலுவான தாள கட்டளையைக் காட்டுகிறது. பின்னர் "ஸ்ரீ மஹா கணபதிம்'' கௌளை ராகத்தில் தெளிவுடனும் பக்தியுடனும் வாசித்தாள். முத்தையா பாகவதர் பசுபதி ப்ரியாவில் இயற்றிய "சரவண பவ" வின் தாள சுறுசுறுப்பை வெளிப்படுத்தி கச்சேரி வேகம் பிடித்தது. கச்சேரியின் முக்கிய கட்டமான ராகம் தானம் பல்லவிக்கு கந்தஜாதி திரிபுத தாளத்தில் சண்முகப்பிரியா ராகத் தில் அவரது குருக்கள் இயற்றிய பல்லவியை இசைத் தார்.

அக்ஷயா மிக அழகாக ராக ஆலாபனையில் தானமும் வாசித்து பல்லவியில் மூன்று வெவ் வேறு ராகங்களில் நிரவல் செய்து ஸ்வரம் வாசித்தார், இதை ரசிகர்கள் கரகோஷத்துடன் ரசித்தார்கள்.

அருமையான தனி அவர்தனம் முடிந்தவுடன் அக்ஷயா "மைத்ரீம் பஜத", "கருணை தெய்வமே" மற்றும் லால்குடி T. ஜெயராமனின் மோகன கல்யாணியில் தில்லானாவுடன் ரசிகர்களின் கைதட்டலுடன் தனது கச்சேரியை முடித்தார்..

ஒட்டுமொத்தமாக, மாண்டலின் அரங்கேற்ற கச்சேரியில் அக்ஷயாவின் திறமை மற்றும் சிறந்த பயிற்சி ஆகியவற்றைக் காட்டியது.

அக்ஷயா தொடர்ந்து அதிக வாய்ப்புகளைப் பெறுவதோடு, எதிர்காலத்தில் மாண்டலினில் சிறந்து கலைஞராக வருவார் என்பதற்கு எந்த சந்தேகம் இல்லை.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370

# நமக்குள்ளே சுவாமியை உணர முடிவதில்லையே?

e-magazine
aanmeegamalar.com

சீடன்: பாபம் என்றால் என்ன?

ஞானி: உலகத்திலுள்ள நலிவுகளால் ஜீவராசிகள் பாதிக்கப் படுமானால் அதுவே பாபம்.

சீடன்: துணை என்றால் என்ன?

ஞானி: எப்பொழுதும் அருகாமையில் இருக்கும் இறைவன்.

சீடன்: இறைவனின் கோலங்கள் என்றால் என்ன ?

ஞானி: கடவுளின் அழகோடு கூடிய உருவங்கள்.

சீடன்: ஆத்ம பலத்தைப் பெற என்ன செய்ய வே ண்டும்?

ஞானி: எது நம்மிடம் சமநிலையாக இருக்கிறது என்பதை உணர வேண்டும்.

சீடன்: ஞானம் என்றால் கடவுள் ஞானம் தானா?

ஞானி: எண்ணெய் வித்து என்றால் அது எல்லா எண்ணையையும் குறிப்பது போல், ஞானம் என்றால் கடவுள், பௌதீகம், கணிதம், லௌகீகம் எல்லாவற்றையும் குறிக்கும்.

சீடன்: ஞானம் வந்ததும் வாழ்க்கை எப்படி மாறு ம்?

ஞானி: உலக விஷயத்தை எடுத்துக் கொண்டாலே அத்தியாவசியமான நியாயம் எது, அநாவசியமான நியாயங்கள் சில சமயம் அத்தியாவசியமான கருத்துக்களாகக் கூட இருக்கும், ஞானம் உள்ளவன் இந்த நிலைகளிலெல்லாம் தெளிவாக இருப்பான்.

சீடன்: எது தர்மம்?

ஞானி: அ த் தி யா வ சி ய மா ன தேவைகளைப் பூர்த்தி செய்வது அனைத்தும் தர்மம். இது எல்லோருக்கும் பொருந்துவதாலும் தர்மம்.

சீடன்: தர்மவான் யார்?

ஞானி: தர்மத்தை உணர்ந்தவன். அனைவருக்கும் தர்மம் வேண்டும் என்று எண்ணுபவன். செயலில் இறங்கும் போது தர்மவான்.

சீடன்: நிறைவு என்றால் என்ன?

ஞானி: நம்மை நாம் முடிவு செய்து கொண்டால் கிடைக்கும் உணர்வு.

சீடன்: நமக்குள்ளே சுவாமியை உணர முடிவதில் லையே?

ஞானி: உயிருக்கு தான் தேகத்தினிடத்திலே அதிகப் பற்று, மன துக்கு அவ்வளவு பற்று இல்லை. அதனால் அது அடிக்கடி ஓடிப் போகிறது. அதை ஓடாமல் கட்டுப்படுத்த பக்தி செய். இறைவன் சிரிப்பது தெரியும்.

சீடன்: மகான்களுக்கு இது எளிதாக உள்ளதே?

ஞானி: மகானும் உன்னைப் போல மனிதன் தானே. ஆனால் எப்பொழுதும் கடவுளையே பொருட்படுத்திக் கொண்டிருப்ப தால் உலக விஷயங்களில் சலனம் ஏற்படாது.

சீடன்: ஞானிகளின், மகான்களின் உலக, தேக விஷயங்கள்?

ஞானி: விட்டவர்களுக்கு தான் கடவுளின் விளையாட்டு புரியும். ஞானி களின் தேக, உலக அபிமானத்தை ஆண்டவன் ஏற்கிறான்.

சீடன்: இது சராசரி மனிதனுக்கு வருவதில்லை, வரப் போவதுமில்லை?

ஞானி: அப்படிச் சொல்லாதே. வராததால் நாம் பாபிகள் என்று அர்த்தமில்லை. புண்ணியத்தை சேர்க்கத் துவங்கவில்லை அவ்வளவுதான்.



சீடன்: எ ங் க ளை உற்சாகப்படுத்த எளிமையாக்குகிறீர் கள்?

ஞானி: அப்படியல்ல. உங்களில் அநேகம் பேருக்கு ஆசை இருக்கிறது. அது அனுபவமாகும்போது அது சரி ஆகிவிடும். அதற்கு பக்தி செய்யத் தொடங்கு.




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203



e-magazine
aanmeegamalar.com


சீடன்: மந்திரம் என்றால் என்ன?

ஞானி: உருவத்தை எடுத்துக் காட்டும் சொல்லே மந்திரம்.

சீடன்: அது ஏன் முக்கியமானது?

ஞானி: பெரிய வியாக்கியானங்கள் மனதை மாற்றாத நிலையில் சிறிய நாமாக்களை இராமா, முருகா என்பதே மனதை மாற்றுவதால் அவை முக்கியம்.

சீடன்: இந்த மந்திரம் தான் நமக்கு என்று எப்படி தெளிவாகும்?

ஞானி: ஏதாவதொரு சொல் தான் சீடனுக்கு மந்திரம் என்பதால் ஞானிகளின் ஆயிரக்கணக்கான வார்த்தைகளைக் கேட்க வேண்டும் சீடன்.

சீடன்: மந்திரத்தின் அர்த்தம் விளங்க வேண்டாமா?

ஞானி: பக்தியுடன் பார்த்தால் ஒரு சொல்லுக்கு நூறு அர்த்தங்கள் புரிந்து இலக்கணமே இலக்கியம் ஆகிறது.

சீடன்: மந்திரங்களின் உயர்வு என்ன?

ஞானி: அனுபவம் இல்லாமல் மந்திரத்தை சொல்வதனால் பலனும் கிடைப்பதில்லை, சலிப்பும் ஏற்படுகிறது.

சீடன்: புராணங்களின் உபயோகம் என்ன?

ஞானி: இராமாயணமும், சிவபுராணமும் அறிவைத் தருகிறது. இராமா, சிவா என்ற மந்திரங்கள் தான் நம்மை மாற்றி ஞானத்தைத் தருகிறது.

## ஞானச் சிதறல்கள்

- இயற்கையாய்த் தோன்றிய உலகதத்துவம் வேலை முதலா? எண்ணம் முதலா? என்ற தத்துவமே. கடைசியில் இந்த அடிப்படையை வைத்தே உலகநாடுகள் அனைத்தும் ஒரு நாளைக்கு முழுமையாக வெளிவரும். முன்னேறும், அதுவே முன் னேற்றம், வளர்ச்சி.
- ரோஜா மலர் அல்லது மலர்கள் எப்பொழுது மொட்டுவிட்டன. மலரப் போகின்றன. தேனீக்கள் வரப்போகின்றன என்பதே இனி தான். உலகத்திற்கும், உலக நாடு களுக்கும் இதுதான் இதுவரை உலகநாடுகளின் நிலை. எல்லா நாடுகளும் ரோஜாச் செடிகளாய் மட்டுமே நிற்கின்றன. அதனால் எங்கும் பாலிடிக்ஸ் (றிஷீறீவீமீவீநீs) என்ற அரசியல் இல்லை. இதுவே எனது ஆராய்ச்சி முடிவு.
- எல்லா உலக நாடுகளிலும் தோன்றிய சிறிய பெரிய கட்சிகள், பாரதத்தில் தோன்றிய சிறிய பெரிய கட்சிகள் இன்றுவரை அனைத்தும் நாட்டின் உண்மை முன்னேற் றத்திற்காகப் பிறந்தவை அல்ல. எந்த கட்சியிலும் பொருளாதார அடிப்படை சிந்தனையாக இல்லை. இது இன்றைய நிலை. (முன்னேற்றம் எப்படி வேண்டும் என்று எண்ணுகிறாய்?)

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

அழகுராஜா

# காவல் தெய்வ வழிபாட்டிற்கு உகந்த ஆடி மாதம்



நம் முன்னோர்கள் பஞ்ச பூதங்களின் சீற்றத்தை கட்டுப்படுத்த ஊரின் எல்லை மற்றும் காவல் தெய்வத்தை வழிபட்டு பல்வேறு இயற்கை சீற்றத்தை தணித்ததாக ஆன்றோர்கள் தெரிவித்துள்ளனர். அத்தகைய காவல் தெய்வங்களுக்கு விழா எடுக்க சிறந்த மாதமாக ஆடி மாதம் கருதப்படுகிறது.

காவல் தெய்வம் என்பது ஒரு ஊரை காத்து வருகின்ற ஒரு சிறிய தெய்வம். காவல் தெய்வங்கள் குடிகொண்டுள்ள ஆலயங்கள் எல்லாம் சிறியதாகவே இருக்கும். ஆனால் திருவிழாக்காலங்களில் அந்தப் பகுதியே களை கட்டும். அந்த தெய்வங்களுக்கு விதவிதமான படையல்கள், ஆடைகள், அபிஷேக ஆராதனைகள் என்று எல்லாமே சிறப்பாக இருக்கும்.

தமிழ்நாட்டில் தற்போது வழிபாட்டில் இருந்து வருகின்ற காவல் தெய்வங்களில் முத்துமாரி அம்மன், ராக்காட்சி அம்மன், மாரியம்மன், திரவுபதி அம்மன், சுடலை முத்து, கருப்பசாமி, காத்தவராயன், முனியாண்டி, சொரிமுத்து, மாடன், வீரன் இப்படிப் பல காவல் தெய்வங்கள் உண்டு. பெரும்பான்மையான ஊர்களில் மாரியம்மன்தான் காவல் தெய்வம். காரணம், ஒரு தாயாக

இருந்து தன்னை நாடியவர்களைக் காப்பதில் மாரியம்மனுக்கு ஈடு இணை கிடையாது. தன் குழந்தைகளைப் பாதுகாப்பதில் தாய்க்குச் சமமாக வேறு எவரைச் சொல்ல முடியும்?

குறிப்பாக, மாரியம்மன் கோவில் இல்லாத ஊரை பார்ப்பது அரிது. ஆடி மாதங்களில் கூழும், வேப்பிலையுமாகக் கொண்டாடப்படும் மாரியம்மன்தான் மக்களை காக்க மண்ணில் உதித்த மாபெரும் தெய்வம். ஆடி மாதத்தை அம்மன் மாதம் என்றும் அம்பாள் மாதம் என்றும் சிறப்பித்து கூறுவார்கள். அந்தளவுக்கு வீடுகளிலும், கோவில்களிலும் விழாக்களும், விரத வழிபாடுகளும் களைகட்டி விடும். ஆடி மாதத்தில் பால்குடம் எடுத்தல், பொங்கல் வைத்து வழிபடுதல், சிறப்பு பூஜைகள் செய்தல், தீ மிதித்தல், கூழ் ஊற்றுதல், அம்மன் கோவில் களுக்கு சென்று வழிபடுதல் என்று இந்த மாதம் முழுவதும் வழிபாடு மாதமாகிறது.

தமிழ் மாதங்களை உத்ராயணம், தட்சிணாயணம் என இரு பிரிவுகளாக பிரிக்கலாம். தை முதல் ஆனி வரையான 6 மாதங்களை உத்ராயணம் எனவும் ஆடி முதல் மார்கழி வரையான 6 மாதங்களை தட்சிணாயண காலமாகவும், பிரிக்கப்பட்டுள்ளது. தட்சிணாயணம் துவங்கும் ஆடி மாதத்தில் சூரியனில் இருந்து சூட்சும சக்திகள் வெளிப் படும்.

வேத பாராயணங்கள், மந்திரங் கள், ஜெபங்கள், வழிபாடுகள் ஆகிய வற்றுக்கு ஆடி மாதம் சிறந்ததாக கருதப்படுகிறது. சுற்றுப்புறத்தை தூய்மையாக்கி, அம்மன் வழிபாட்டை மேம்படுத்திக் கொள்ளவும் ஆடி மாதம் பயன்படுகிறது. அம்மனுக்கு வேப்பிலை சாற்றி வழிபடுவது, கூழ் படைத்து சாப்பிடுவதும் ஆடி மாதத்தின் சிறப்பாகும். ஆடி மாதத்தைக் கணக்கிட்டுத்தான் பண்டிகை களின் தொடக்கம் அமை கிறது.


ஆடி மாதம் தட்ப வெப்ப நிலை சீராக இருக் காது என்பதால் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும். ஆடி மாதத்தில் புதிதாக துளிர் விடும் கொழுந்து வேப்பிலைக்கு அதீத மருத்துவ, தெய்வீக குணம் உண்டு உடலில் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் சக்தியும் உண்டு. மேலும் எளிதாக ஜீரணிக்கக் கூடிய உணவான கூழ் சாப்பிட்டால் ஆரோக்கியம் சீராக இருக்கும். ஆடி மாதம் என்றாலே அம்மன் வழிபாட்டிற்கு பெருமை சேர்க்கும் மாதமாகும்.

இன்னும் ஓரிரு தினங்களில் ஆடி மாதம் தொடங்க உள்ள நிலையில், அம்மன் கோவில்கள், காவல் தெய்வ ஆலயங்களில் திருவிழா ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன. ஆடி மாதம் பல்வேறு வழிபாட்டிற்குரிய விசேஷ தினங்களை கொண்ட மாதம் என்பதால் வீடுகளில் சுப நிகழ்வுகளை குறைத்து அம்மன் வழிபாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

– எம் அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி,
திருச்சி, செல்: 9750333265



e-magazine
aanmeegamalar.com


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
.காம்
FREE
180 e-books
1000–க்கணக்கான
ஆன்மிக செய்திகள்
முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை
பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...
eBook
FREEDOWNLOAD
aanmeegamalar.com
தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

# ஆன்மீக வழியில் அமைதி





நாம் ஞானிகளை வணங்கும்போது அவர்களை துதி செய்யும்போது நமக்கு ஞானம் பற்றி அறிவும் மனதில் சித்த சுத்தியும் ஏற்படுகிறது. நாம் ஞானியர்களை நாடி செல்வதற்குகூட நாம் போன ஜென்மத்திலோ இந்த ஜென்மத்திலோ புண்ணிய கர்மாக்கள் செய்திருக்க வேண்டும். மனிதன் எத்தகைய சூழ்நிலையிலும் மனம், வாக்கு,

**82**

செயல் மூலம் ஞானிகளை இழிவுபடுத்தி பேசுவதோ, நினைப்பதோ அவர்களிடம் அநாகரீகமாகவோ நடந்து கொள்ளவோ கூடாது. அவ்வாறு நடந்துகொள்ளும்போது அந்த ஞானியரிடமுள்ள பாவ கர்மாக்கள் ஞானிகளின் மனம் புண்படும்படி பேசுபவர்களிடம் அவர்களையும் அறியாமல் வந்து சேரும்.

ஞானிகளிடம் பாவ கர்மாக்கள் இருக்குமா? என்று கேட்கத் தோன்றும். ஞானிகள் அஞ்ஞானிகளாக இருந்தபோது அவர்கள் செய்த பாவ கர்மாக்கள் அதனை அனுபவவிக்காமல் அவரை விட்டு நீங்காமல் இருக்கும். எனவே முற்றும் துறந்த ஞானிகளை நாம் ஒருபோதும்




பேசுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். எனவே மற்றவர்களை புண்படும்படி பேசவோ செயல்படவோ கூடாது என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ள வேண்டும். ஞானியர்களின் மனநிலை சுக துக்கங்களை சமமாக ஏற்றுக்கொள்ளும் தன்மையில் இருப்பார்கள். சுக துக்கங்களை சமமாக கருதுவதால் ஞானிகள் மனதளவில் எந்தவிதமான பாதிப்பும் அடைவதில்லை.

எடுத்துக்காட்டாக ஒரு கதை. ஒரு ஞானி காட்டில் அமர்ந்து தவம் செய்து கொண்டிருந்தார். அப்போது அவருடைய கடுமையான தவத்தை எண்ணி ஒரு வன தேவதை அவர் முன்னால் தோன்றியது. ஞானி அந்த தேவதையை வணங்கினார். அந்த வன தேவதை அவரிடம் என்ன வரம் வேண்டும் என்று கேட்டது. ஞானி எனக்கு ஒரு வரமும் வேண்டாம். நான் தவத்தின் மூலமாக சுகமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறேன் என்று தேவதையிடம் கூறினார்.

அதற்கு அந்த தேவதை நான் ஒருவருக்கு காட்சி அளித்தால் அவர் விரும்பும் வரம் எதுவும் தராமல் அவ்விடத்தை விட்டு செல்ல மாட்டேன் என்று அந்தத் தேவதை பிடிவாதம் பிடித்தது. தேவதை வற்புறுத்தியதால் அந்த ஞானி சரி எனது வலது காலில் உள்ள ஆறாத புண்கட்டியை இடது காலுக்கு மாற்றி விடு என்று தேவதையை நோக்கிக் கேட்டார் என்று ஒரு கதை உண்டு. அந்த ஞானியைப் பொறுத்தவரை முற்றும் துறந்தவர். அவர் சுகமும் துக்கமும் சமமாக கருதி வாழ்ந்தாலும் அவர் மன நிறைவு பெற்றவராக இருக்கிறார். உலகில் ஞானிகள் தாமரையிலைத் தண்ணீர்போல் பற்றற்று வாழ்வதால் அவர் மன அமைதியுடன் மகிழ்ச்சியாக இருக்கிறார். அப்படிப்பட்ட முற்றும் துறந்த ஞானிகள் ஜீவனை விட்ட பிறகும் அவருக்கு மறு பிறப்பில்லை என்று சாஸ்திரம் கூறுகிறது.

நிந்திக்கக்கூடாது. அவர்களை துதி செய்து பயபக்தியுடன் வணங்க வேண்டும். அதன்மூலம் நமக்கு ஓரளவு மன அமைதி கிடைக்கும்.பொதுவாக நாம் பிறர் மனம் புண்படும்படி பேசவோ செயல்படவோ கூடாது. அவ்வாறு நாம் பேசினாலோ, செயல்பட்டாலோ யாரை மனம் புண்படும்படி பேசுகிறோமோ அவர் அமைதியாக பொறுமையாக பேசாமல் இருந்தால் அவரிடமுள்ள பாவ கர்மாக்கள் அவரை மனம் புண்படும்படி பேசுகிறவரை வந்து சேரும்.

அதனால் நாம் பாவ கர்மாக்களின் பலன்களை நாம் அனுபவவிக்க நேரிடும் என்று சாஸ்திரம் கூறுகிறது. நாம் பிறர் மனம் புண்படும்படி பேசுவதும் பாவ கர்மாவைச் சேரும் என்பதை நினைவில் கொண்டு, பிறர் மனம் புண்படும்படி



மனதில் ஏற்படும் மனக்குறைவுக்குத்தான் சம்சாரம் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஆன்மீக தத்துவத்தில் சம்சாரம் என்பது அறியாமை, அத்தியாசம், பயம் அல்லது சோகம் என மூன்று நிலைகளில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. எடுத்துக்காட்டாக ஒருவன் தூரத்தில் தெரியும் கயிற்றைப் பார்த்து பாம்பு என்று மனதில் நினைப்பது அறியாமை என்ற நிலையாகும். அவன் தூரத்தில் பார்த்தது உண்மையில் கயிறு. உண்மை எதுவோ அது அத்தியாசம் நிலை ஆகும். அந்தக் கயிற்றினை பாம்பு என்று நினைத்துக்கொண்டு மனதில் தோன்றும் அச்சம் கொள்வது பயம் என்ற நிலையாகும்.

ஒரு முறை நாரதர் முனிவர் சனத்குமார் என்பவரிடம் ‘நான் நான்கு வேதங்கள், பதினெண் புராணங்கள், தியானம், ஜபம் போன்ற பலவற்றையும் அறிந்திருந்தும் எனக்கு மன நிறைவு என்பது இல்லாமல் துயரப்படுகிறேன்’ என்று கூறினார். அதனைக் கேட்ட முனிவர் சனத்குமார் நீர் அனைத்தும் அறிந்திருந்தும் உன்னை நீ அறியவில்லை என்று சுட்டிக் காட்டினார். ஆத்ம ஞானம் பற்றி அறிந்து அதனை அடைந்தவன் சோகத்தைக் கடக்கிறான் என்று உபநிடதம் கூறுகிறது. அதாவது உலகில் காணும் துன்பம் துயரங்களை எல்லாம் கடக்கிறான் என்று பொருள் ஆகும்.

ஒரு மனிதன் உயிரோடு இருக்கும்போது சோகத்தை துயரத்தைக் கடப்பதுதான் ஜீவமுக்தி ஆகும். ஞானிகள் ஆத்ம ஞானத்தினால் உலகில் வாழும்போது ஜீவமுக்தி அடைந்து விடுகிறார்கள். அதாவது ஞானிகள் உயிரோடு உடலோடு இருக்கும்போது ஆத்ம ஞானத்தினால் மனதில் உள்ள சோகத்திலிருந்து துயரங்களிலிருந்து விடுதலை பெற்று விடுகிறான். ஆத்ம ஞானம் அடைந்தவன் எவ்வளவு காலம் உயிருடன் இருக்கிறான் என்றால் அவனுடைய பிராரத்தம் முடிந்தவுடன் அவன் ஜீவனை விட்டு விடுகிறான். அதன்பின் அவனுக்கு மீண்டும் பிறப்பு இறப்பு என்பது இல்லை என்று சாஸ்திரம் கூறுகிறது.

காசி போன்ற புண்ணிய ஸ்தலங்களில், நல்ல நேரத்தில், மரணம் நிகழ வேண்டும் என்று பொதுவாக மக்கள் நினைப்பார்கள். அவ்வாறு புண்ணிய ஸ்தலங்களில் மரணம் அடைந்தால் ஞானிகளைப்போல் முக்தி நிலை அடையலாம் என்று அக்ஞானிகள் எண்ணுகிறார்கள். அக்ஞானிகள்போன்று முற்றும் துறந்த ஞானிகள் அவ்வாறு எண்ணுவதில்லை. முற்றும் துறந்த ஆத்ம ஞானம் அடைந்த ஞானிகள் எந்த இடத்தில் எந்த நேரத்தில் ஜீவனை துறந்தாலும் ஜீவமுக்தி நிலையை அடைந்தவனாகிறான். அவன் ஆத்ம ஞானத்தை அடைந்து சோகத்தையும் சுகத்தையும் கடந்தவன் ஆகிறான்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

ஞானிகள் உலகில் வாழும்போது எப்போது ஆத்ம ஞானத்தை அடைந்தானோ அப்போது முக்தி அடைந்து விடுகிறான். எனவே மரணத்தைப் பற்றி நினைத்து அவன் அக்ஞானிகள் போன்று பயப்படுவதில்லை. அவன் உலகில் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாதவன்.

e-magazine
aanmeegamalar.com



எனவே முற்றும் துறந்த ஞானிகள் துன்பம் துயரங்கள் போன்றவற்றை பற்றி நினைத்து வருந்துவதில்லை. ஞானிகள் துன்பங்களைக் கண்டு அக்ஞானிகள் போன்று துவளுவதும் இல்லை. அதேபோல் இன்பத்தைக் கண்டு துள்ளுவதும் இல்லை.

நாம் மற்றவர்களிடம் பேசும்போது நம்மை ஒரு ஐந்து வயது குழந்தையாகவோ தொண்ணூறு வயது முதியவராக கற்பனை செய்துகொண்டு பேசிப் பாருங்கள். அவ்வாறு நாம் கற்பனை செய்து பேசும்போது நமக்கு கோபம், பொறாமை,சுயநலம் போன்றவை வருவதில்லை. ஐந்து வயது குழந்தை நம்மை மிதித்தாலோ அடித்தாலோ குழந்தையின் மீது நாம் கோபப்படுவதில்லை. முற்றும் துறந்த ஞானிகள் ஆத்ம ஞானத்தை அடைந்தவுடன் இந்த உலகமே குழந்தையாக மனதில் எண்ணிக்கொள்கிறார்கள்.

அதாவது உலகில் வாழும் மக்கள் அனைவரையும் குழந்தையாக எண்ணிக்கொண்டு வாழ்ந்து வருவதால் ஞானிகள் யாரையும் வெறுப்பதில்லை. உலக வழக்கில் ஒருவனை சிறப்பித்துக் கூறும்போது ‘அவனுக்கு குழந்தை மனசுங்க‘ கூறுவதுண்டு. அதனால் அவன் மனநிறைவுடன் வாழ்கிறான். அதனால் அவன் ஒருபோதும் மன அமைதியை இழப்பதில்லை. சுக துக்கங்களை கடந்தவன் ஞானியாகிறான். அவனுக்கு அகங்காரம், கோபம், பொறாமை, விருப்பு, வெறுப்பு போன்றவை இருப்பதில்லை என்று சாஸ்திரம் கூறுகிறது. நம்மிடம் பொறாமை, விருப்பு, வெறுப்பு சுயநலம் போன்றவை இல்லாமல் இருந்தால், நாம் தேடும் விரும்பும் அமைதி நம்மையும் அறியாமல் வந்து சேரும்.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி:
9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

# சத்துமாவு

## Sathu maavu

**41 வகையான சிறுதானியங்களில் தயாரிக்கப்பட்டது**





41 ingredients

Sathu maavu kanji

*Multigrain Porridge is the most healthy breakfast. It is rich in minerals and has high fibre content that keeps blood sugar under control.*



## ingredients

✦Ragi, ✦Samba wheat, ✦Rye, ✦White corn, ✦Black gram, ✦Green gram, ✦Millet, ✦Black cowni rice, ✦Sorghum, ✦Bamboo rice, ✦White chickpeas ✦Black chickpeas, ✦Roasted groundnuts, ✦White soybeans, ✦Horsetail rice, ✦Millet rice, ✦Varaku rice, ✦Samai rice, ✦White Ellur, ✦Black rice, ✦White Awal ✦ Sukku, ✦Cucumber seed, ✦Pumpkin seed, ✦Barley, ✦Groom samba, ✦Cashew nut, ✦Almond nut, ✦Walnut, ✦Double beans, ✦Maize, ✦Cardamom, ✦Red Rice, ✦Pistachio Nut, ✦Edible Rice, ✦Biryani Rice, ✦Red Soya Beans, ✦Gatti Elephant Rice, ✦Unity Rice, ✦Darbis Seed ✦Hindu Salt,

**மேற்கண்ட அனைத்தும் நன்கு பதப்படுத்தி, மிகுந்த தரத்துடன் பக்கவிளைவுகளை தரும் கெமிக்கல் பயன்படுத்தாமல் வீட்டு பயன்பாட்டு முறையில் தயாரிக்கப்பட்டது.**

மேலும் விபரங்களுக்கு 7550199561